வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 24.05.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 168 | பக்கங்கள் : 16

## கையிருப்பிலுள்ள அரிசி செப். வரையே போதும்!

கொழும்பு, மே 24
நாட்டில் தற்போதுள்ள அரிசியின் கையிருப்பு செப்ரெம்பர் நடுப்பகுதி வரை மட்டுமே போதுமானது என்று பிரதமரால் நியமிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாகக் கண்டறியும் குழு நேற்று அறிவித்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் இந்தக் குழு கூடியபோதே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் மாதாந்த அரிசி தேவை 2 இலட்சம் மெற்றிக் தொன் எனவும், தற்போதைய அரிசி கையிருப்பு செப்ரெம்பர் நடுப்பகுதிக்குள் தீர்ந்து விடும் எனவும் அந்தக் குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## உணவு நெருக்கடியை தீர்ப்பதற்கு புலம்பெயர் தமிழர் உதவவேண்டும்!

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு

கொழும்பு,
நாட்டின் தற்போதைய பொருளாதார குறிப்பாக உணவு நெருக்கடியைப் போக்குவதற்கு புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் உதவிகளையும் நாம் எதிர்பார்க்கின்றோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"நாடு தற்போதைய நிலைமையில் மிகப் பெரிய உணவு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இந்தநிலையில் வெளிநாடுகள், சர்வதேச அமைப்புக்களின் உதவிகளை மட்டுமன்றி புலம் பெயர் தமிழ் மக்களின் உதவிகளையும் எதிர்பார்க்கின்றோம்.

15

## வாசுதேவ தலைமையில் புதிய கூட்டணி உதயம்!

கொழும்பு, மே 24
பாராளுமன்றத்தில் தனித்து இயங்கும் 10 கட்சிகளும் ஒன்றிணைந்து கூட்டணியாக அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக வாசுதேவ நாணயக்கார எம். பி. தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், "ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவராக எனது கூட்டணியை மேலும் விரிவுபடுத்த பிற கட்சிகளின் உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தி வருகிறேன். நாங்கள் ஜன நாயகத்தை மிகவும் மதிக்கும்

15

# மருந்து பற்றாக்குறையால் மரணங்கள் ஏற்படலாம்!

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு,மே 24
இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மருந்து தட்டுப்பாட்டால் விரைவில் மரணங்கள் நிகழலாம் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

அத்தியாவசிய மருந்துகள் இல்லாததால் மருத்துவர்கள் உயிர்காக்கும் அறுவைச் சிகிச்சைகளை ஒத்திவைக்க வேண்டியிருந்தது என்று மருத்துவர்களை மேற்கோள்காட்டி ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

15

## சட்டம் ஒழுங்கை பாதுகாக்க தயார் நிலையில் இராணுவம்!

கொழும்பு, மே 24
சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்காக, இராணுவம் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்யும் வர்த்தமானி அறிவித்தலை, ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

இந்த வர்த்தமானி, பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

அந்தவகையில், பொது அமைதியைப் பேணுவதற்கு, ஆயுதப் படைகளை தயார் நிலையில் வைத்திருக்கும் வகையில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

## இன்று எரிவாயு வழங்கப்படாது!

கொழும்பு, மே 24
இன்றைய தினம் எரிவாயு சிலிண்டர் விநியோகம் நடைபெறாது. எனவே பொதுமக்கள் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

எந்த எரிவாயு சிலிண்டர் விநியோகமும் இன்று இடம்பெறாது என்று அறிவித்துள்ள லிட்ரோ நிறுவனம் அதற்கான காரணத்தையும் வெளியிடவில்லை.

நேற்று இரண்டாவது நாளாகவும் நாடு முழுவதும் எரிவாயு விநியோகம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய அமைச்சரவையில் ஒரு தமிழர், ஒரு முஸ்லிம்

கொழும்பு, மே. 24
சர்வகட்சி அரசில் மேலும் 8 புதிய அமைச்சரவை அமைச்சர்கள் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்கள், கொழும்பு - கோட்டை ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று முற்பகல் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

அதற்கமைய கோட்டாபய - ரணில் தலைமையிலான சர்வ கட்சி அமைச்சரவையில் முதல் தமிழராக டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டுள்ளார். அவர் கடற்றொழில் அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அதேவேளை,

15

டக்ளஸுக்கு கடற்றொழில் அமைச்சு



## ஜூன் 20இற்கு பின்னர் புதிய தலைவர் வருவார்?

### பிரபல பெண் சோதிடர் கணிப்பு

கொழும்பு, மே 24
எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் நாளுக்குப் பின்னர் நாட்டில் புதிய தலைவர் ஒருவர் உருவாகுவார் என்று பிரபல பெண் சோதிடரான கல்யாணி ஹேரத் மெனிகே தெரிவித்துள்ளார்.

சமூகவலைத்தள தொலைக்காட்சி சனலுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1993 சனிப் பெயர்ச்சியை விட

15

## பொருட்களுக்கான நெருக்கடி அடுத்த வாரத்தில் குறையும்!

### மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை

கொழும்பு, மே 24
நாடு மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அடுத்த வாரமளவில் அத்தியாவசிப் பொருட்களுக்கான நெருக்கடியை ஒப்பீட்டளவில் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க

15

## 21ஆம் திருத்த சட்டம் அமைச்சரவையிடம்!

கொழும்பு, மே 24
21ஆம் திருத்தச் சட்டத்தின் மூல வரைவு நேற்று மாலை அமைச்சரவையில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்டது.

20ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிக அதிகாரங்களை வெட்டிக் குறைப்பதாக

15

## இனப்பிரச்னையை தீர்த்திருந்தால் இன்று நெருக்கடிகள் வந்திருக்காது

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு, மே 24
தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வைக் கண்டிருந்தால் நாட்டின் பொருளாதாரப் பிரச்னை இந்தளவு தூரத்துக்குச் சென்றிருக்காது என்று தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தற்போதைய சூழலில்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

அரசியலமைப்பின் இருபத்தியோராவது திருத்தம் பற்றியே பலரும் இப்போது பேசிக்கொண்டிருக்கின்றனர்.

அதனை தோற்கடிப்பதில் பொதுஜன முன்னணி எப்படியும் ஆர்வம் காட்டும் என்றவாறான செய்திகள் வரத் தொடங்கியிருக்கின்றன.

இந்த நேரத்தில் ஏற்கனவே பாராளுமன்றில் நடந்து முடிந்த ஒரு விடயத்தை நோக்கினால், இதற்கும் என்ன நடக்கும் என்பதை புரிந்துகொள்ளலாம்.

பிரதி சபாநாயகர் தெரிவின்போது பிரதமரின் விருப்பத்திற்கு மாறாக பொதுஜன முன்னணியினர் நடந்துகொண்டது, ரணில் தலைமையிலான அரசின் பதவிக்காலம் குறித்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது.

முன்னதாக, பெண் ஒருவரை பிரதி சபாநாயகராக நியமிக்கவேண்டும் என்று பிரதமர் ரணில் பகிரங்கமாகவே கோரிக்கை விடுத்திருந்தார்.

அவரது இந்தக் கோரிக்கை வந்த மறுதினமே ஐக்கிய மக்கள் சக்தி தமது சார்பில் ஒரு பெண்ணை சபாநாயகர் தேர்வுக்கு முன்னிலைப்படுத்தியது.

பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களை வைத்திருக்கும் பொதுஜன முன்னணியும் தமது சார்பில் ஒரு பெண்ணை வேட்பாளராக நிறுத்தலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவிய நிலையில், பொதுஜன முன்னணி அஜித் ராஜபக்‌ஷவை திடீரென்று களம் இறக்கியது. வெற்றியும் பெற்றிருந்தது.

இந்த வியடம் ரணிலுக்கு ஒரு செய்தியைச் சொன்னது மாத்திரமல்ல, ஒட்டுமொத்த நாட்டிற்கும் ஒரு செய்தியைச் சொல்லியிருந்தது.

அதாவது, ரணிலின் கருத்தை பொதுஜன முன்னணியின் ‘தலை’ பொருட்டாக எடுக்கவில்லை என்பதே அந்தச் செய்தி.

அதுமாத்திரமன்றி, ஒன்பதாம் திகதி வன்முறைகளுக்குப் பின்னர் தத்தமது வீடுகளிலிருந்து வெளியேறி மறைவிடங்களில் இருக்கும் பெரும்தொகையான பொதுஜன முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு அன்றைய தினம் வரமாட்டார்கள் என்றே நம்பப்பட்டது. இதனால், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரே வெற்றிபெறுவார் என்றும் பலரவலாக நம்பப்பட்டது. அப்படியிருந்தும், அவர்கள் எப்படி பாராளுமன்றம் வந்தனர் என்பதை இந்த ஊர்க் குருவி அறிய முயன்றபோதுதான் பல தகவல்கள் தெரிய வந்தன.

பொதுமக்களின் தாக்குதல்களுக்கு பயந்து கடந்த வாரம் பாராளுமன்றத்துக்கு பெருமளவிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மை உருமாற்றியே வருகை தந்திருந்தமை இப்போது தெரியவந்திருக்கின்றது.

பாராளுமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை கூட்டுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. முழு நாடும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தது. இருப்பினும், பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு சென்று விட்டனர். அதேசமயம், பொதுவெளியில் நடமாடுவதையும் தவிர்த்திருந்தனர். அவர்கள் உண்மையில் பயந்தார்கள் என் பது இரகசியமான விடயம் அல்ல. ஆனாலும் அவர்கள் பலர், அனேகமாக எல்லோருமே (ஒருசிலர் தவிர) பாராளுமன்றம் வந்திருந்தனர்.

உறுப்பினர்களில் சிலர் அன்று பாராளுமன்றத்துக்கு வருவதற்கு பல்வேறு யுக்திகளை கையாண்டதும் தற்போது தெரியவந்துள்ளது.

சிலர் ஆடம்பர கார்களை விட்டுவிட்டு சிறிய கார்களில் வந்தனர். அவர்களில் பலர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆடைகளுக்குப் பதிலாக, சாதாரண ரிசேர்ட் மற்றும் காற்சட்டைகளை அணிந்து வந்தனர்.

அவர்களில் சிலர் போலியான முடி, தொப்பி போன்றவற்றை அணிந்துகொண்டு, முதலில் தங்கள் உருவத்தை மறைத்துக்கொண்டும் வந்தனர். இவர்களில் பலரது நடத்தை கேலிக்குரியதாக இருந்தது என்று அவற்றை நேரில் பார்த்த ஊடக நண்பர் ஒருவர் விபரித்திருந்தார்.

பாராளுமன்றத்தின் வாகனத் தரிப்பிடத்தில் இருந்தும், பாராளுமன்றத்திற்கு அருகில் உள்ள இடங்களில் இருந்தும் அவர்கள் குழுவாக மீண்டும் தேசிய உடைகளில் பாராளுமன்றத்துக்குள் நுழைந்ததாக நேரில் கண்ட சிலர் தெரிவித்தனர்.

இத்தனை பிரயத்தனங்களை எடுத்து அவர்கள் பாராளுமன்றம் வந்தது, வேறு எதற்காகவும் அல்ல, தமது கட்சியின் ‘தலை’யின் உத்தரவை இப்போதும் ஏற்றுக்கொள்கின்ற நிலையில்தான் இருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்துவதற்காகவே. பாராளுமன்றில் தாங்களே இன்னமும் பெரும்பான்மையாக இருக்கின்றோம் என்ற தகவலை மாத்திரம் அவர்கள் சொல்லவில்லை, மாறாக, பிரதமராக இருக்கும் ரணில் சொல்கின்ற எல்லாவற்றையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்ற செய்தியையும் ரணிலுக்கு சொல்வதற்காகத்தான்.

இந்நிலையில், இவர்கள் இருபத்தியோராவது திருத்தத்தை, அதுவும் தமது ‘தலை’யின் எம்.பி.பதவியையே குறிவைக்கும் இந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்ளப்போதில்லை என்ற செய்தியையும் சொல்வதற்குத்தானே!

- ஊர்க்குருவி

# தமிழ் அரசியல்வாதிகளையும் கர்மவினை சும்மா விடாது!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

வவுனியா, மே 24

கர்மா தமிழ் அரசியல்வாதிகளையும் விடாது என்று வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொண்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.




காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் தொடர்ச்சியான போராட்டம் நேற்றுடன் 1919ஆவது நாளை எட்டியது. இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் வாரத்தை ஒட்டி பேசியபோதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தை அகற்றுமாறு சர்வதேச நாணய நிதியம் நிபந்தனைகளை விதித்தது. இலங்கை பொருளாதாரத்தின் 15வீத செலவினம் இதுவாகும், இது தமிழ் மக்களின் பிரதான கோரிக்கை. மக்கள் பிரதிநிதிகள் சிவில் அமைப்புகள் இந்த கோரிக்கையை வலுப்படுத்த வேண்டும்.

ஐ. நா. கூட்டத்தொடருக்கு முன்பு இலங்கைக்கு உதவிகள் வழங்கும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிடம் வலுவான கோரிக்கைகளை தமிழ் அரசியல்வாதிகள் சிவில்அமைப்புக்கள் முன்வைக்கவேண்டும். இல்லாவிடின் கர்மா அனைவரையும் பாதிக்கும்.

சிங்கள அரசியல் வாதிகள் பதவிக்கு வந்ததும் இனவாதிகளா பேசுவார்கள் இதுதான் 74 வருட தமிழர்களின் வரலாறு. நல்லிணக்கம் மற்றும் தெற்கு அரசியல் பற்றிபேசும் தமிழ் அரசியல்வாதிகள் இனப்படுகொலைக்கான நீதியை பெறமுடியாது - என்றனர். (ஐ)

## சிவப்பு ரீசேர்ட் அணிந்தவர்கள் எல்லாம் ஜே. வி. பியினர் அல்லர்!

### விஜித ஹேரத் எம். பி.

கொழும்பு, மே 24

கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற அமைதியின்மை தொடர்பில் கைது செய்யப்பட்ட பெரும்பான்மையானவர்கள் ஜே. வி. பியின் அங்கத்தவர்கள் என்ற குற்றச்சாட்டை ஜே. வி. பியின் பிரசார செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மறுத்துள்ளார்.

அமைதியின்மையில் ஜே.வி.பி ஈடுபட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜே. வி. பி பிரதிநிதிகள் நேற்று பொலிஸ் மா அதிபரை சந்தித்துள்ளனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஹேரத், கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையான வர்கள் ஜே. வி. பியை சேர்ந்தவர்கள் அல்ல என்பது பேச்சின் போது தெரிய வந்தது. கைதானவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஏனைய அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சில நபர்கள் ஜே. வி. பிக்கு எதிராக அரசியல் சூனிய வேட்டையில் ஈடுபட்டு வருவதாகவும், அரசியல் பழிவாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறானதோர் அறிக்கை தொடர்பில் தான் பரிசீலிப்பதாக பொலிஸ் மா அதிபர் கூறியதாக பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

இதேவேளை, சிவப்பு சட்டை அணிவதால் மாத்திரம் ஒருவரை ஜே. வி. பி. ஆதரவாளராக மாற்ற முடியாது என ஜேவிபியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

இந்த அமைதியின்மையில் ஜே.வி.பியின் கரம் விளையாடுவதாக சமூக ஊடகங்கள் ஊடாக சமூகத்தில் ஒரு கருத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். ஜே.வி.பி.யின் பிரதிநிதிகளுடன் ஏதேனும் பிரச்சினைகள் எழுந்தால் நேரடியாக பேசுமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்தார். (ஐ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 24

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் வரிசையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையில் நடக்கும் இந்த நிகழ்வில், சைவப் புலவர் கு. சுமூகலிங்கம் சைவ வாழ்வு என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (ஐ)

## சிகரெட்களுடன் ஒருவர் கைது

காத்தான்குடி, மே 24

தடை செய்யப்பட்ட சிகரெட்களை வியாபாரம் செய்து வந்த ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர். அவரிடமிருந்து 4 பொதிகள் கொண்ட 1020 சிகரெட்களும் கைப்பற்றப்பட்டன.

காத்தான்குடியை சேர்ந்த 65 வயது நபரே நேற்று திங்கட்கிழமை மாலை இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இந்தக் கைது இடம்பெற்றது.

கைதான நபரையும் சான்றுப் பொருட்களையும் சட்ட நடவடிக்கையை முன்னெடுக்க காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ஐ)



## சாவகச்சேரி விபத்து; இருவர் படுகாயம்!

தென்மராட்சி, மே 24

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மினிவான் வீதியோரமாக நின்ற மோட்டார் சைக்கிளை மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் அருகே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
24.05.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், வைகாசி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பொதுஜன பெரமுன யாருடைய கட்டுப்பாட்டில்?

அரசியலமைப்பில் மாற்றங்கள் செய்வது தொடர்பில் தீவிரம் காண்பிக்கப்படுகின்றது. அரசாங்கத்தை அடுத்த கட்டமாக முன்கொண்டு செல்ல வேண்டுமாயின், அதற்கு இந்த மாற்றங்கள் கட்டாயமானவை. ஏனெனில், அரசியலமைப்பு ரீதியாக நோக்கினால், ரணில் விக்கிரமசிங்க பலவீனமானதொரு பிரதமர். இதற்கும் அப்பால், பாராளுமன்றத்திலும் அவருக்கென்று பிரத்தியேக பலம் இல்லை. அவர் முற்றிலும் பொதுஜன பெரமுனவை மட்டுமே நம்பியிருக்கின்றார். இந்த நிலையில் அரசியலமைப்பு மாற்றம் வெற்றிகரமாக நிறைவேறினால்தான், ரணில் விக்கிரமசிங்கவால், அவர் நினைத்தவாறு விடயங்களை முன்னெடுக்க முடியும்.

ஆனால், சிலரின் பார்வையில், பஸில் ராஜபக்ஷ குழப்பங்களை ஏற்படுத்தலாமென்னும் அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. ஏனெனில், 19ஆவது திருத்தச்சட்டம் - அப்படியே - நிறைவேற்றப்பட்டால், பஸில் ராஜபக்ஷ அரசியலிலிருந்து முற்றிலுமாக வெளியேற நேரிடும். ஏனெனில், 19ஆவது திருத்தச் சட்டம், இரட்டை குடியுரிமையுள்ளவர்கள் - பாராளுமன்ற உறுப்பினர்களாக வருவதை தடுக்கின்றது. கடந்த பொதுத் தேர்தலின்போது, தனது அமெரிக்க குடியுரிமையை கைவிட மனமில்லாத காரணத்தினாலேயே, பஸில் ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடவில்லை.

பின்னர், 20ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டு - பஸில் ராஜபக்ஷ உள்நுழைவதற்கான கதவு திறக்கப்பட்டது. இப்போது அதற்கு மீளவும் ஆபத்து நேரிடக்கூடிய சூழல் உருவாக்கியிருக்கின்றது. தான் அரசியிலிலிருந்து வெளியேறும் சூழலை, நாட்டின் நலன் கருதி, பஸில் அமைதியாக ஏற்றுக் கொள்வாரா - அல்லது, தனது செல்வாக்கை பயனபடுத்தி, பின்வரிசை பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களை தூண்டிவிடுவாரா?

ஒருவேளை - இரட்டை குடியுரிமை விவகாரம் நீக்கப்படாமல், 21ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்படுமாக இருந்தால், ரணில் விக்கிமசிங்கமீதான விமர்சனங்கள் உறுதியாகிவிடும். அதாவது, ராஜபக்ஷ குடும்பத்தை பாதுகாக்கும் டீலோடுதான், ரணில் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றார். இதனை ரணில் எவ்வாறு சமாளிக்கப் போகின்றார்? அதேவேளை, சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் பஸிலுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருப்பதால், அவர்கள் இரட்டை குடியுரிமை விவகாரத்துக்கு ஆதரவாக இருக்கலாம். அதேவேளை, எதிரணியில் இருப்போரும் ஆதரவாக வாக்களித்தால், 21ஆவது திருத்தச் சட்டத்தை வெற்றிகொள்வதில் சிக்கல்கள் இருக்கப் போவதில்லை.

ஒருவேளை பஸில் இதில், குழப்பங்களை விளைவித்தால், ராஜபக்ஷக்கள் தங்களின் அதிகாரத்துக்கான ஆட்டத்தை இன்னும் கைவிடவில்லையென்றே, மக்கள் விளங்கிக் கொள்வர். ராஜபக்ஷக்கள் பதவி விலகிய பின்னர், பதவியிலிருக்கும் ஒரேயொரு ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மட்டும்தான். உண்மையில், அவருடைய கட்டுப்பாட்டின் கீழ்தான், பொதுஜன பெரமுன இருக்க வேண்டும். அவ்வாறிருந்தால், இந்தப் பிரச்னை இலகுவாகக் கையாளக்கூடிய ஒன்றே! ஆனால், அவ்வாறிருக்கின்றதா என்னும் கேள்வியுண்டு. மக்கள் தனக்கும், தனது குடும்பத்துக்கும் எதிராக இருக்கின்றபோது, தொடர்ந்தும் மக்கள் பொருளாதார சுமையால் கொந்தளித்துக் கொண்டிருக்கும்போது, ஜனாதிபதி, தனது சகோதரரின் விடயத்துக்கு ஆதரவாக இருக்கமாட்டார் என்னும் கணிப்பு உண்டு. ஏனெனில், இது வெளிப்படையாக தெரியுமானால், அவரை வெளியேறுமாறு கூறுபவர்களுக்கான ஆதரவு மேலும் வலுவடையும். கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை முழுமையாக ஜனாதிபதியால் கட்டுப்படுத்த முடியாமல் போனால், பஸிலால் குழப்பங்களை விளைவிக்க முடியும்.

மொத்தத்தில், அரசியல் குழப்பங்கள் இன்னும் ஓயவில்லை. அரசியல் குழப்பங்கள் ஓயாமல், நிலைமைகளின் முன்னேற்றத்தைக் காண்பிக்க முடியாது. அதிகார மோகமும், பதவி ஆசையும்தான், தென்னிலங்கையை அரசியலை ஆளப் போகின்றதென்றால், ரணில் அல்ல - புத்தபெருமான் பிரதமராக வந்தாலும்கூட, நாட்டை முன்னேற்ற முடியாது.

# தெணியானின் எழுத்தும் வாழ்வும்: ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக் குரல்!



ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஈழத்துப் படைப்பிலக்கிய வரலாற்றில் ”தெணியான்” என்ற பெயர் ஆழப் பதிந்துள்ளமை என்பது இன்று வரலாற்றுச் சான்றாகியுள்ளது. சமூகக் கொடுமைகளைக் கண்டு கொதித்து, அவற்றைத் தமது படைப்புகளாகத் தந்த எழுத்தாளர் தெணியான், குறிப்பாக சாதி அமைப்பின் அவலங்கள் குறித்து மிக அதிகமான எண்ணிக்கையிலான சிறுகதைகளைப் படைத்த எழுத்தாளர் என்ற சிறப்பையும் பெறுபவர்.

ஒடுக்கப்பட்ட சமுதாய மக்கள் மத்தியில் அவர்களுள் ஒருவராகவே தெணியான் வாழ்ந்து கொண்டிருந்து மக்கள் இலக்கியத்தை படைத்துள்ளார். தெணியானின் படைப்புக்கள் வெறும் கற்பனை மனிதர்களைப் பாத்திரங்களாக உருவாக்கி நடமாட விடுவதில்லை. அவருடைய படைப்புக்கள் யதார்த்தமானவை. நிதர்சனமான காலக் கண்ணாடிகளே அவரின் படைப்புக்கள்.

எந்தக் காலத்திலும், எத்தகைய சூழ்நிலையிலும், தாயக மண்ணை, தமிழ் மக்களை விட்டுத் தூரவிலகி ஓடிப்போகாத ஒருவரே தெணியான். ஆரம்பகாலம் முதல் இன்று வரை தான் வரிந்து கொண்ட கொள்கையில் இருந்து தளம்பாது நேரிய நோக்குடன் இருந்து வருபவர். அதனால் இந்தச் சமுதாயத்தில் இருக்கும் யதார்த்தமான பிரச்னைகளே தெணியானின் இலக்கியங்களாகப் பிறந்தன.

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைப் போராட்டங்களை மிகுந்த அக்கறையுடன் அவதானித்து இலக்கியங்களை படைத்தவர் தெணியான். அவரின் பார்வை ஏழைகள், வஞ்சிக்கப்படுகிறவர்கள், ஆதரவற்றவர்கள், ஒடுக்கப்படுகிறவர்கள், ஏமாற்றப்படுபவர்கள், நலிந்தவர்கள் என்போர் பக்கமே எப்பொழுதும் இருந்தது. இந்த மக்களின் அவலங்களை எல்லோரும் அறியும் வண்ணம் சுட்டிக்காட்டி வெளியே வருவதை நோக்கமாகக் கொண்டு எழுதியவர் தெணியான். வேறு சிலர் இன்னொருவகையில் சமூகக் கொடுமைகள் எதுவும் இன்றில்லையென மூடிமறைக்கப் பார்க்கிறார்கள். இவை யாவையும் கருத்திற் கொண்டு, நலிந்து துன்பப்படும் மக்கள் தமது பிரச்னைகளைத் தெளிவாக விளங்கிக் கொண்டு அவைகளில் இருந்து விடுபடுவதற்குரிய உணர்வு பூர்வமான பிரக்ஞையை அவர்களுக்கு ஊட்ட வேண்டும் என்பதே தெணியானின் எழுத்தின் குறிக்கோளாக இருந்தது.

தெணியான், சிறுபராயத்திலிருந்தே மார்க்சியக் கோட்பாட்டில் நாட்டம் கொண்டவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தளகர்த்தர்களுள் ஒருவராக விளங்கியவர். சிறுபான்மைத் தமிழர் மகா சபையில் இணைந்து, ஆலய பிரவேசம், தேநீர் கடை பிரவேசம் போன்ற பன்முகப்பட்ட சாதிய எதிர்ப்புப் போராட்டங்களில் நேரடியாகப் பங்கு கொண்ட ஒரு சமூக விடுதலைப் போராளி. ஏற்றத்தாழ்வற்ற ஒரு சமுதாயமே தெணியானின் இலட்சியமாக விளங்கியது.

அடக்கி ஒடுக்கப்பட்ட இந்த சமுதாயத்தை வென்றெடுப்பதற்கான உந்துசக்தியாக இலக்கியத்தைக் கருதிய தெணியான், ஒடுக்கப்பட்டோர் அழகியலைத் தமது ஆக்கத் திறன் மூலம் தொடர்ந்தும் அழகுபடுத்தி வந்தவர். இவற்றின் பெறுபேறாக, ஈழத் தமிழிலக்கியப் பரப்பில் விசேட கவனிப்புக்குரிய ஆற்றல் மிகு படைப்பாளியாக தமிழ் இலக்கிய வரலாற்றில் மிளிர்கின்றார்.

தெணியானை சாதிப் பிரச்னை தவிர வேறெதையும் எழுத முடியாதவர் எனச் சிலர் விமர்சித்துள்ளனர். ஆயினும் தெணியானின் எழுத்துக்களை படித்தவர்களுக்கு இந்தப் பிரச்னையை அவர் எவ்வளவு நிதானமாக பதிவு செய்திருக்கிறார் என்பது புலப்படும். யதார்த்த நிதானம் தவறிக் கொட்டியழும் சில படைப்புக்களிடையே தெணியானின் நிதர்சன எழுத்தின், யதார்த்த படைப்பின் தனித்துவத்தைப் புரிந்துகொள்ளலாம்.

தெணியான் உண்மையில் அவர் சாதியம் பற்றி மட்டும் எழுதிய எழுத்தாளர் அல்ல. மனிதரின் வாழ்வியல் பற்றிப் புரிந்துணர்வோடு எழுதும் எழுத்தாளராக தன்னை விரிவுபடுத்தியுள்ளமை தெரிகிறது, சாதியால் இழிவுபடுத்தப்பட்டவர்கள் பற்றியும் தெணியானின் எழுத்துக்களில் காணலாம். அத்துடன் பொருளாதார ரீதியாக அடக்கப்பட்டவர்கள் பற்றியும் தெணியானின் எழுத்துக்களில் காணலாம்.

இன ரீதியாகத் துன்பத்துக்கு ஆளாகும் தமிழரின் தேசிய பிரச்னை பற்றியும் தெணியான் பல படைப்புக்களை எழுதியுள்ளார். தெணியானின் ஆக்கங்களாக வெளிவந்த படைப்புக்கள் அனைத்தும் ஆய்வாளர்களின் சிந்தனைகளைக் கிளறிவிட்டுள்ளன எனக் கூறலாம்.

படைப்பியல் இலக்கியம் வெறும் பொழுதுபோக்கிற்கான சாதனமன்று. ஆழ்ந்த சமூக நோக்குடன் எழுத்தாளன் சொல்லுவது தனது தனிப்பட்ட, சமூக ரீதியான வாழ்க்கையின் நடைமுறைச் செயற்பாட்டினது சத்தியமான வெளிப்பாடாகவும் இருக்க வேண்டும் என்பதில் உறுதியானவர் தெணியான்.

மறைந்த தெணியான் ஆரம்ப காலம் முதலே இடதுசாரி முற்போக்கு சிந்தனைகளோடும் அவை சார்ந்த போராட்டங்களோடும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். தாழ்த்தப்பட்ட மக்கள் போராட்டங்களோடு தன்னை இணைத்துக் கொண்டு அவர் தனது எழுத்தையும் சமூக மாற்றத்தையும், சீரமைப்பிற்காகக் கூறிய ஆயுதமாகவே பயன்படுத்தியுள்ளார். இருண்மையில் இடர்ப்பட்டு இருந்தவர்களையும் உலுப்பியெழுப்பி ஆர்வமுடன் காது கொடுக்க வைக்கும் பேச்சுக்கலையும் தெணியானின் கைவந்த கலையாகும்.

ஈழத்து எழுத்துத் துறையில் கால் பதித்து ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக சமூகப் போராளியாக விளங்கியவர். தெணியானின் எழுத்துக்களை மிகநீண்ட காலமாக உன்னிப்பாக அவதானித்தால் ஈழத்தின் தலைசிறந்த இலக்கிய சிருஷ்டியாகவே அவர் வரலாற்றில் தடம் பதித்துள்ளார்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 24 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 10
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.00
திதி : நவமி




**மேடம்**
தொழிலில் லாபம் காண்பீர்கள். முயற்சிகள் வெற்றியாகும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். திடீர் பணவரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும்.

**இடபம்**
துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். புதிய பொறுப்பு உங்களைத்தேடி வரும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிட்டும். தடைபட்டிருந்த செயல்களில் வெற்றி உண்டாகும்.

**மிதுனம்**
அமைதியாக செயல்பட்டு சாதிக்க வேண்டிய நாள். முயற்சியில் தடைகளைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த தகவல் வராமல் சோர்வடைவீர்கள். பணியிடத்தில் நிதானம் தேவை.

**கடகம்**
அமைதி காப்பது நல்லது. வம்பும் பிரச்னைகளும் இன்று உங்களைத் தேடிவரும். மற்றவர் விஷயத்தில் தலையிட வேண்டாம். மனம் ஒரு நிலையில் இல்லாமல் போகும். அமைதி கெடும்.

**சிம்மம்**
சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள். பிரச்னைகளை சமாளித்து வெளியில் வருவீர்கள். வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும். மகிழ்ச்சியான நாள். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி காண்பீர்கள்.

**கன்னி**
நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள். உங்களுடைய செயல்களில் வேகம், விவேகம் இருக்கும். சோர்வு விலகி உற்சாகமாக செயல்படுவீர்கள். அதிரடியாக செயல்பட்டு அதிர்ஷ்டம் காண்பீர்கள்.

**துலாம்**
நினைத்தது ஒன்று நடப்பது ஒன்றாக இருக்கும். செயல்களில் தடை, தாமதம் இன்று ஏற்படும். எதிர்பார்த்திருந்தவற்றில் ஏமாற்றம் உண்டாகும். குடும்பத்தினரின் அதிருப்திக்கு இன்று ஆளாவீர்கள்.

**விருட்சிகம்**
அதிகாரிகளின் கோபம் உங்கள் மீது திரும்பலாம். முயற்சிகளில் தடைகளை சந்திப்பீர்கள். மற்றவர்களுக்கு பதில் சொல்லும் நிலை இன்று உண்டாகும். வேலைப்பளு அதிகரிக்கும்.

**தனுசு**
தடைபட்ட வருமானம் கைக்கு வரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். அதிர்ஷ்டமான நாள். விடாமுயற்சியால் நினைத்ததைச் சாதிப்பீர்கள். பிறர் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**மகரம்**
பண விவகாரத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் நெருக்கடியால் சங்கடங்களுக்கு ஆளாகலாம். வார்த்தைகளில் நிதானம் தேவை. வரவிற்கு மீறிய செலவுகளை சந்திக்கலாம்.

**கும்பம்**
மனதில் இருந்த குழப்பங்கள் விலகும். குழப்பங்களைத் தவிர்த்தால் உங்களுடைய முயற்சிகள் வெற்றியாகும். சிந்தித்து செயல்பட வேண்டிய நாள். உங்களுடைய முயற்சியில் ஒன்று இன்று வெற்றியாகும்.

**மீனம்**
திடீர் செலவால் தடுமாறுவீர்கள். வேலைப்பளு அதிகரிக்கும். ஓய்வின்றி செயல்படுவீர்கள். பதட்டமின்றி செயல்படுவதால் நன்மை உண்டு. திட்டமிட்டிருந்த வகையில் செலவு அதிகரிக்கும். நவீன பொருட்களை இன்று வாங்குவீர்கள்.

# உணர்வெழுச்சியுடன் சென்னையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

*சென்னை, மே 23*

2009 ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்டோரை நினைவுகூரும் விதமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சென்னையில் இடம்பெற்றது.

சென்னை - பெசன்ட் நகர் பேருந்து நிலையம் அருகே இடம்பெற்ற இந்த நிகழ்வை மே 17 இயக்கம் ஒருங்கிணைத்தது. இதில் ஈழ ஆதரவாளர்கள் பலரும் பங்கேற்று நினைவேந்தலை நினைவுகூர்ந்தனர்.




பல நூறு பேர் பங்கேற்ற இந்த நிகழ்வில் போரில் கொல்லப்பட்ட பாலச்சந்திரன், இசைப்பிரியா ஆகியோரின் படங்களை ஏந்தியவாறு பேரணி இடம்பெற்றது.

இதில் பேசிய மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, “இறந்தவர்களுக்கு கடலோரம் நினைவேந்துவது தமிழர் முறை. மெரீனாவில் நினைவேந்தலுக்கு இடம் கேட்டு பொலிஸாரிடம் அனுமதி கேட்டோம். பெசன்ட் நகரில் அனுமதி தருவதாக சொல்லிவிட்டு இன்று (நேற்று முன்தினம்) மீண்டும் அனுமதி மறுத்திருக்கிறார்கள். கொல்லப்பட்ட தமிழர்களுக்கு மரியாதை செலுத்தக்கூடாது என அ.தி.மு.க. எடுத்த நிலைப்பாட்டைத்தான் தற்போதைய தி.மு.க. அரசும் எடுத்திருக்கிறது, இது அதிர்ச்சியளிக்கிறது.

ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என்றும், அந்த மக்களுக்கு தனி நாடு கேட்டும் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறீர்கள். ஆனால், நினைவேந்தலை தடுக்கிறீர்கள். நினைவேந்தலை தடுக்க என்ன காரணம்? தி. மு. க. அரசுக்கு நாங்கள் மெழுகுவர்த்தி ஏந்துவதால் என்ன பிரச்னை வந்துவிடும்? அப்படியானால் மத்திய அரசு சொல்வதையெல்லாம் தி. மு. க. அரசு அப்படியே கேட்கிறதா? நினைவேந்தலை நியாயமாக தமிழக அரசு நடத்த வேண்டும். ஆனால், தடுக்கி றார்கள். நினைவேந்தல் தொடர் பாக தமிழக அரசு தமது நிலைப் பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்” என்றார். (ஐ)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்; திருமுருகன் உட்பட 500 பேர் கைது!

*சென்னை, மே 24*

சென்னையில் பொலிஸாரின் தடையை மீறி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னெடுத்தனர் என்ற குற்றச்சாட்டில் மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி உட்பட 500 பேர் கைது செய்யப்பட்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்றுமுன்தினம் சென்னை பெசன்ட் நகர பேருந்து நிலையம் அருகே முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விடுதலை சிறுத்தைகள் கட்சி, ஆம் ஆத்மி கட்சியை சேர்ந்தவர்களும் பங்கேற்றனர்.

நினைவேந்தல் நிறைவடைந்ததைத் தொடர்ந்து தடையை மீறி நினைவேந்தலை முன்னெடுத்தனர் என்ற குற்றச்சாட்டில் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் கைது செய்யப்பட்டு சமுதாய கூடத்தில் அடைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். (ஐ)

## 600 பொலிஸாரின் பாதுகாப்புடன்

# தருமபுரம் ஆதீனகர்த்தாவை பல்லக்கில் சுமந்து வீதியுலா!

*சென்னை, மே 24*

மயிலாடுதுறை அருகேயுள்ள தருமபுரம் ஆதீனத்தில் பட்டினப் பிரவேசம் நிகழ்ச்சியில், தருமபுரம் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை பல்லக்கில் அமரவைத்து பக்தர்கள் சுமந்து வீதியுலா வந்தனர். இதையொட்டி, 600 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.



மயிலாடுதுறையில் தொன்மை வாய்ந்த தருமபுரம் ஆதீன திருமடம் உள்ளது. இந்த மடத்தில் ஆண்டுதோறும் மடத்தை தோற்றுவித்த குரு முதல்வர் குருஞான சம்பந்தர் குருபூஜை விழா, சமய பயிற்சி வகுப்புகள், திருநெறி தெய்வத் தமிழ் மாநாடு, கருத்தரங்கம், ஞானபுரீஸ்வரர் கோயில் பெருவிழா என பல்வேறு விழாக்கள் நடைபெறுவது வழக்கம். அதன்படி, இந்தாண்டு ஞான புரீஸ்வரர் கோயில் பெருவிழா மே 12ஆம் திகதி தொடங்கியது.

இந்த விழாவின் 11ஆம் திருநாளான நேற்றுமுன்தினம் பட்டினப்பிரவேசம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதையொட்டி, குருஞான சம்பந்தர் சிலைக்கு தருமபுரம் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் சிறப்பு அபிஷேக, ஆராதனைகளை செய்து, ஞானபுரீஸ்வரர், தருமபுரீஸ்வரர் கோயில்களில் வழிபாடு மேற்கொண்டார். பிற்பகலில் மாகேஸ்வர பூஜை, மேல குரு மூர்த்தியில் வழிபாடு ஆகியவை நடைபெற்றன.

தொடர்ந்து, திருக்கூட்ட அடியவர்கள், சிவனடியார்கள் புடைசூழ தருமபுரம் ஆதீன திருமடத்தின் 27ஆவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பல்லக்கில் அமர்ந்து, தருமபுரம் ஆதீன திருமடத்தின் வீதிகளை வலம் வரும் பட்டினப்பிரவேசம் நிகழ்ச்சி நடைபெற்றது. மங்கல வாத்தியங்கள் முழங்க, யானைகள் முன்செல்ல, பல்லக்கில் அமரவைத்து ஆதீனகர்த்தரை பக்தர்கள் சுமந்து வந்தனர். அப்போது, தருமபுரம் ஆதீன திருமட வீதிகளில் வீடுகள்தோறும் மக்கள் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்றனர். தொடர்ந்து குருபூஜை மடத் தில் வழிபாடு மேற்கொண்டு, ஞான கொலுக்காட்சியில் ஆதீனகர்த்தர் பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார்.

இதேவேளை, பட்டினப் பிரவேச நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் அதிகாரம் அமைப்பின் சார்பில் மயிலாடுதுறை பேருந்து நிலையம் அருகே கறுப்புக் கொடியேந்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பின்னர், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 97 பேரை பொலிஸார் கைது செய்தனர். (ஐ)

# தமிழ்நாட்டு உறவுகளுக்கு ஈழத்தமிழரின் நன்றிகள்!

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு



மன்னார், மே. 24

தமிழ்நாட்டு உறவுகள் இலங்கை மக்களுக்கு மிக உற்சாகமான முறையில் தங்களுடைய உறவுகள் பட்டினி கிடக்கக்கூடாது என்ற நோக்கத்தோடு அத்தியாவசிய பொருட்கள் அனுப்பி வைத்திருந்தார்கள். இந்த செயல்பாட்டுக்காக தமிழ்நாட்டு மக்களுக்கும் தமிழ்நாட்டு முதலமைச்சர் தமிழ்நாட்டின் சட்டசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள் கிறோம் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கனேடிய பாராளுமன்றத்தில் எங்களுடைய மே 18 நாளை இனப்படுகொலை நாளாக அந்த வாரத்தை அனுஷ்டிப்பதற்கு கனேடிய பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்காக பாடுபட்ட ஹரி ஆனந்தசங்கரி அவர்களுக்கு நன்றி. அவர் இந்த விடயத்தில் பாரிய முனைப்பு காட்டியதை இட்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த செயல்பாடானது எங்கள் நாட்டிலும் பிரதேச சபை நகர சபை போன்ற இடங்களில் இந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்பதை பிரதான கோரிக்கையாக நான் முன்வைக்கிறேன்.

அதேபோல் கனேடிய நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அந்த நாட்டு மக்களுக்கும் முதலில் நன்றியை தெரிவிக்கிறேன்.

அத்துடன் தமிழ்நாட்டு உறவுகள் இலங்கை மக்களுக்கு மிக உற்சாகமான முறையில் தங்களுடைய உறவுகள் பட்டினி கிடக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு அரிசி, பால் மா ,மருந்து பொருட்கள் அனுப்பி வைத்திருந்தார்கள்.

இந்த செயல்பாட்டுக்காக தமிழ்நாட்டு மக்களுக்கும் தமிழ்நாட்டு முதலமைச்சர் தமிழ்நாட்டின் சட்டசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள் கிறோம்.

ஆகவே தமிழ்நாட்டு மக்களும் இலங்கை தமிழ் மக்களும் ஏற்படும் சிறுசிறு முரண்பாடுகளை பெரிதாக்காமல் எங்களுக்குள் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பது என்னுடைய ஒரு வேண்டுகோளாக இருக்கின்றது.

எங்களுடைய வன்னி மாவட்டத்தில் குறிப்பாக கடல் தொழிலாளர்கள் விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருள் பிரச்னை பாரிய பிரச்னையாக இருக்கிறது. மண்ணெண்ணெய் இல்லாத சூழலில் அவர்களுடைய தொழில் பாதிக்கப்படுகிறது. அவற்றை சீர் செய்யுமாறு ஏற்கனவே பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறோம். முதன்மை அடிப்படையில் எங்களுடைய விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் மண்ணெணணெய் டீசல் வழங்க வேண்டும் என்று பேசியிருந்தோம்.

இப்போது இருக்கும் அமைச் சர் விரைவாக சீர் செய்வதாக கூறியபோதும் அவை சரியான முறையில் சீர் செய்யப்பட வில்லை என்பது மக்களின் குற்றச்சாட்டு. -என்றார். (அ)

# ஹரீனின் செயல் அருவருக்கதக்கது

## சஜித் பிரேமதாஸ சீற்றம்

கொழும்பு, மே. 24

**எமது கட்சியின் தீர்மானத்தை மீறி அரசு பக்கம் சாய்ந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். இவர்கள் இருவரினதும் இந்தச் செயற்பாடு மிகவும் அருவருக்கத்தக்கது என எதிர்க்கட்சித்தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசின் நல்ல கருமங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிரணியில் இருந்துகொண்டு ஆதரவு வழங்கும் எனவும், அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை எனவும் நாம் ஏற்கனவே முடிவெடுத்திருந்தோம்.

இந்நிலையில், ஹரீன் பெர்னாண்டோவும், மனுஷ நாணயக்காரவும் எமது கட்சியின் முடிவை மீறிச் செயற்பட்டுள்ளதால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்நிலையில், ஹரீனுக்கும் மனுஷவுக்கும் அமைச்சுப் பதவிகளை அரசு வழங்கியுள்ளதால் அரசுக்கான எமது ஆதரவு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி கூடி பரிசீலிக்கும்-என்றார். (அ)

# இசை நிகழ்ச்சிகள், திருவிழாக்களில் ஒலிபெருக்கி பாவனை யாழில் தடை

யாழ்ப்பாணம், மே. 24

யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சிகள் மற்றும் திருவிழாக்களில் ஒலிபெருக்கி சாதனங்களை பயன்படுத்துவதற்கு தடைவிதித்துள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உயித் என் பி லியனகே தெரிவித்தார்.

க.பொ.தர சாதாரண தர பரீட்சை ஆரம்பமாகியுள்ளதன் காரணமாக, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரி அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்-

க.பொ.த. சாதாரண பரீட்சை ஆரம்பித்துள்ளது. யாழ் மாவட்டத்தில் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நாம் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். பரீட்சைக்கு செல்லும் மாணவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை தடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார். (அ)

# அலரி மாளிகை செல்லாதிருக்க ரணில் விக்கிரமசிங்க தீர்மானம்

கொழும்பு, மே. 24

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகைக்கு வசிப்பதற்காக செல்லப்போவதில்லை என்ற தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

அவர் தமது தனிப்பட்ட இல்லத்தில் வசிப்பதுடன் அலரி மாளிகைக்கு செல்லாமல் கொழும்பு ப்ளவர் வீதியிலுள்ள பிரதமர் அலுவலகத்திலிருந்தே உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் அலுவலகத்தின் செலவை நூற்றுக்கு 50 வீதமாக குறைப்பதற்கு தீர்மானித்து அது தொடர்பான பணிப்புரைகளையும் ஏற்கனவே வழங்கியுள்ள நிலையில் செலவை குறைப்பது தமக்கும் பொருந்தும் என்பதை வெளிப்படுத்துவதற்காக அவர் அலரி மாளிகைக்குச் செல்லாமல் ப்ளவர் வீதியிலுள்ள பிரதமர் அலுவலகத்திலிருந்து கடமைகளை செய்வதற்கு தீர்மானித்துள்ளார்.

அதேவேளை, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அலரி மாளிகையில் குடியிருப்பதற்காக செல்லவில்லை என்றும் தேவையான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக மட்டுமே அலரி மாளிகையை உபயோகப்படுத்தியதாகவும் பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். (அ)

# குரங்கு அம்மை நோய் தொடர்பில் இலங்கையிலும் அவதானம் தேவை!

கொழும்பு, மே. 24

உலகின் பல நாடுகளில் பரவி வரும் குரங்கு அம்மை நோய் (Monkeypox) தொடர்பில் இலங்கையும் அவதானம் செலுத்த வேண்டும் என்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

காய்ச்சல், தலைவலி, உடல்வலி மற்றும் சோர்வு ஆகியவை இந்த நோயின் அறிகுறிகளாகும் என ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் நிறுவனத்தின் பணிப்பாளர், பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

நேற்று முன் தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

“மே 13 முதல் நேற்று முன்தினம் வரை உலகில் 14 நாடுகளில் 92 நோயாளிகள் பதிவாகியுள்ளனர். ஆபிரிக்க பிராந்தியத்தில் பரவியதாக நம்பப்படும் குரங்கு அம்மை நோய் பரவுவது குறித்து உலக சுகாதார நிறுவனம் தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

பெரும்பாலான நோயாளிகள் சில வாரங்களில் குணமடையும் போது, பி.சி.ஆர். பரிசோதனையின் மூலம் வைரஸைக் கண்டறிய முடியும்.



பாதிக்கப்பட்ட நபருடன் நேருக்கு நேர் வருவதன் மூலமோ, நேரடி உடல் தொடர்பு மூலமாகவோ அல்லது பாதிக்கப்பட்ட நபர்கள் பயன்படுத்தும் பாத்திரங்கள் மற்றும் தளபாடங்களைப் பயன்படுத்துவதன் மூலமோ இது சுவாசத் துளிகள் மூலம் பரவுகிறது.

இருப்பினும், இந்த நோய் கோவிட்-19 போன்ற மிகவும் பயங்கரமான நோயாக இன்னும் அடையாளம் காணப்பட வில்லை.

பெரியம்மை தடுப்பூசி போடப்படு பவர்களுக்கு இதன் தாக்கம் குறைவாகவே இருக்கும்” என்றும் பேராசிரியர் சந்திம ஜீவந்தர மேலும் தெரிவித்தார். (ஐ)

# பொருளாதார பிரச்னைக்கு ரணில் அரசு தீர்வு காணும்

## அசாத் சாலி நம்பிக்கை

கொழும்பு, மே. 24

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், நாட்டின் பொருளாதார பிரச்னைக்கு தீர்வு காணும் என்ற நம்பிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதால், புலம்பெயர் இலங்கையர்களும் உதவ முன்வர வேண்டுமென தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அந்நியச்செலாவணி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை சரிசெய்வதற்கு, நாட்டிற்குள் அதிகளவு டொலர் வரவேண்டும். புலம்பெயர் இலங்கையர்கள், வெளிநாடுகளில் இதைச் சேகரித்து இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பும் முயற்சிகளில் இறங்குவது அவசியம். இவ்விடயத்தில், குறுகிய மனநிலையில் செயற்படக்கூடாது.

சகல கட்சிகளின் தலைவர்களும் ரணில் தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முன்வந்திருப்பதால், பொருளாதார மேம்பாடுகளை அடைந்துகொள்ளும் வழிகள் விரைவில் திறக்கப்படலாம். எனவே, இளைஞர்கள் இவ்விடயம் பற்றி சிரத்தை கொள்வதுதான் இன்றைய அவசரத் தேவை.

உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதற்கு தேவையான அமைதியை நாட்டில்



கொண்டுவரும் பொறுப்பையும், சுற்றுலாப் பயணிகளை அதிகளவு உள்ளீர்க்கும் சூழலையும் இளைஞர்களே ஏற்படுத்த வேண்டும். தனித்தனி அஜந்தாக்களின் நாட்டின் இன்றைய சூழலை பாவிப்பதற்கு முயல்வது, பொருளாதாரத்தை அடிமட்டத்தில் வீழ்த்திவிடும்-என்றார். (அ)

# தேசபந்து தென்னக்கோனுக்கு இடமாற்றம் வழங்கவேண்டும்

## சட்டமா அதிபர் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்பு

கொழும்பு, மே. 24

மே 9ஆம் திகதி காலிமுகத் திடலில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளில் தேவையற்ற தலையீடுகளை தவிர்ப்பதற்காக சட்டமா அதிபர் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அதற்கமைய, மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை



இடமாற்றம் செய்யுமாறும் சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# 95 ரக ஒக்ரேன் பெற்றோலை நாடு முழுவதும் பெறலாம்

கொழும்பு, மே. 24

95 ரக ஒக்டோன் பெற்றோல் நேற்று முதல் நாடளாவிய ரீதியில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விடுவிக்கப்படவுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தனது ருவிட்டர் கணக்கில் பதிவு ஒன்றை பதிவிட்டு அவர் இதனை தெரிவித்தார்.

இரண்டு கப்பல்களில் இருந்து 95 ரக ஒக்ரேன் பெற்றோல் தரையிறக்கப்பட்டுள்ளதாகவும் அவை எதிர்வரும் 6 வாரங்களுக்கு போதுமானதாக இருக்கும் எனவும் அவர் கூறினார்.

எனவே இன்று முதல் 95 ரக ஒக்ரேன் பெற்றோலை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# மன்னார் பொது வைத்தியசாலைக்கு மெசிடோ நிறுவனத்தால் பொருட்கள்

மன்னார், மே. 24

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு தேவையான ஒரு தொகுதி மருத்துவ பொருட்களை மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினர் நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை களஞ்சியசாலையில் கையளித்தனர்.



மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ நேற்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதனிடம் அத்தியாவசிய மருத்துவ பொருட்களை கையளித்தார்.

இதன்போது,2 ஆயிரம் குளுக்கோமீற்றர் ஸ்ரிப்ஸ்,400 சத்திர சிகிச்சை மயக்க ஊசி மருந்துகள் உட்பட சுமார் 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மருந்துகள் வழங்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வைத்தியசாலைகளில் மருந்து பொருட்கள் உள்ளடங்களான வைத்திய உபகரணங்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள குறித்த மருந்து மற்றும் மருத்துவ பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் மன்னார் மெசிடோ நிறுவனத்திடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக குறித்த மருத்துவ பொருட்கள் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தமக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் முறைப்பாடு

கொழும்பு, மே. 24

வீடுகளை எரித்தமை உட்பட தமக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு வொன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தனித்தனியாக முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான முறைப்பாடுகள் அனைத் தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# பரீட்சை கடமைகளில் ஈடுபடுவோர் எரிபொருள் பெறுவதில் சிக்கல்நிலை

கொழும்பு, மே. 24

சாதாரண தர பரீட்சை கடமைகளில் ஈடுபடும் பணிக்குழாமினருக்கு, சலுகை அடிப்படையில் எரிபொருளை பெற்றுக்கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

நேற்று கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை ஆரம்பமான நிலையில், குறித்த பரீட்சை கடமைகளுக்கு செல்லும் பணிக்குழாமினருக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அது முறையாக செயற்படுத்தப்படாமையினால் ஆசிரியர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்ததாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டார். (அ)

# பெற்றோல் இல்லாததால் குழந்தை உயிரிழப்பு; ஜனாதிபதியை விளாசிய மஹேல ஜெயவர்தன

கொழும்பு, மே. 24

எரிபொருள் கிடைக்காத காரணத்தால் உரிய நேரத்தில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாமல் பிறந்து இரண்டு நாட்களே ஆன ஆண் குழந்தை உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது நிர்வாகத்தை இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் மஹேல ஜயவர்தன கடுமையாகச் சாடியுள்ளார்.

ஹல்தும்முல்ல சொரகுனே ரதகந்துர என்ற இடத்தில் சில நாட்களுக்கு முன்னர் பிறந்து இரண்டு நாட்களேயான குழந்தை இறந்த சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சிசு தாய்ப்பால் பருகாமல் உடல் மஞ்சள் நிறமாகியது. குழந்தையை ஹல்தும்முல்ல வைத்தியசாலைக்கு கொண்டு வருவதற்காக தந்தை முச்சக்கர வண்டியை தேடி கிடைக்கவில்லை. ஒரு லீற்றர் பெற்றோல் தேடி ஒரு மணி நேரம் அலைந்து திரிந்து பின்னர் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டபோது குழந்தையின் இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு மிக மோசமாகக் குறைந்திருந்தது.

இதுவே குழந்தையின் மரணத்துக்குக் காரணம் என வைத்தியர் சானக் ரொஷான் பத்திரண தெரிவித்துள்ளார். இதனை அவர் தனது முகநூலின் பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில் இந்த மரணம் தொடர்பில் கருத்து தெரிவித்த மஹேல ஜயவர்தன, ஒரு தந்தை என்ற வகையில் இந்த தருணத்தில் பெற்றோர் படும் துன்பத்தை என்னால் புரிந்து கொள்ள முடியும் எனக் கூறியுள்ளார்.

சிசுவின் மரணத்திற்கு பொறுப்பேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் அவரது நிர்வாகமும் உடனடியாக பதவி விலக வேண்டும் என மஹேல ஜயவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# நாட்டு மக்களுக்கு 3 வேளை உணவு!

### பிரதமர் ரணில் உறுதி

கொழும்பு, மே 24

இலங்கை மக்களுக்கு மூன்று வேளை உணவு கிடைப்பதற்கு முன்னுரிமை அளிக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் தனது உத்தியோக பூர்வ பேஸ்புக் மூலம் இதனைத் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பானது, வரவிருக்கும் உணவு நெருக்கடியைச் சமாளிக்க சர்வதேச உதவியை நாடுவது குறித்து உறுதியளித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி எதிர்க்கட்சித் தலைவருடன் சந்திப்பு!

கொழும்பு, மே 24

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி அலகா சிங், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கையின் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்கு முன்னெப்போதையும் விட வலுவான ஆதரவை வழங்குமாறு இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துப்பொருள்களின் தட்டுப்பாடு தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் இந்நிலைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியால் செயற்படுத்தப்பட்டுவரும் "எதிர்க்கட்சியின் மூச்சு" வேலைத்திட்டம் மூலம் 50 க்கும் மேற்பட்ட வைத்திய சாலைகளுக்கு உபகரணங்களை நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரால் இதன்போது விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்தச் செயற்பாட்டாய் உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாராட்டினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(அ)

# யாழ்ப்பாண மாவட்ட மக்கள் சிறந்தவர்கள்

### பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 24

**ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடும்போது யாழ்ப்பாண மக்கள் சிறந்தவர்கள், பொலிஸ் திணைக்களத்தின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம் என யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உயித் என் பி லியனகே தெரிவித்தார்.**

நேற்று யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரி அலுவலகத்தில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாண பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் என்ற வகையில் நேற்று ஊடகங்களின் ஊடாக யாழ்ப்பாண மக்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாடு பூராகவும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட சம்பவங்கள் மற்றும் வன் முறை சம்பவங்களோடு ஒப்பிடும்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சகல மக்களும் எந்தவிதமான வன்முறைச் சம்பவங்களிலோ எதிர்ப்பு நடவடிக்கையிலோ ஈடுபடாமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை எவருக்கும் இடையூறு விளைவிக்காத வகையில் பொலிஸ் அதிகாரிகளுடன் முரண்படாமல் அன்றாடச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

யாழ்.மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டுவதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்குகின்றார்கள். எனவே பொலிஸ் திணைக்களம் என்ற ரீதியில் யாழ்ப்பாண மக்களுக்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

அத்தோடு யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற மூவினங்களைச் சேர்ந்த மக்களுக்கும் மிகுந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ் மாவட்டத்தில் குற்றச் செயல்கள் மற்றும் சில இடங்களில் இடம் பெற்றுள்ளன. அவ்வாறான இடங்களில் இடம் பெறும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை பொலிசார் உரிய தரப்பினருடன் உதவியுடன் கைது செய்திருக்கிறார்கள்.

ஏனென்றால் யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் விரைவாக பொலிஸாரால் கைது செய்யப் படுகிறார்கள். எனினும் சில சம்பவங்களுடன் தொடர்பு பட்டவர்கள் இன்னமும் கைது செய்யப் படவில்லை அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவார்கள்.

எனவே யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றால் புதிய சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த முடியும்-என்றார். (அ)

# காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தினால் டெங்கு ஒழிப்பு



மட்டக்களப்பு, மே. 24

காலநிலை மாற்றம் காரணமாக மழைக்காலம் ஆரம்பமாக உள்ளதனால் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லீமா வசீர் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு களத் தடுப்பு பிரிவினர்கள் இணைந்து மேற்கொள்ளும் டெங்கு நுளம்புகள் பெருகுவதை தடுக்கும் நடவடிக்கைகள் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி நிர்வாக பிரதேசங்களில் நடைபெற்று வருகின்றன.

இந்த களப்பணியில் மக்கள் மத்தியில் பேசிய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லீமா வசீர், நுளம்பு பெருகுவதனை குறைக்கவும், எங்கள் பகுதியில் டெங்கு பரவுவதைத் தடுக்கவும், தினமும் காலை குறைந்தது 10 நிமிடங்கள் உங்கள் சுற்றுச்சூழலைப் நுளம்பு பெருகும் இடங்களை அகற்றி டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

பொதுமக்களாகிய அனைவரும் எமது பிரதேசத்திலிருந்து டெங்கை ஒழிக்க உதவவேண்டும். தனியே சுகாதாரத் துறையினரால் மாத்திரம் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை சகலரும் அறிவீர். பொதுமக்கள் தமது வீடு வளவுகளில் தினமும் நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்கள் மற்றும் இடங்களை அகற்றுங்கள் அல்லது நீர் தேங்கி நிற்காதவாறு கவனியுங்கள்-என்றார். (அ)

# 21ஆவது திருத்தம் இல்லையேல் உடனடியாக பதவி விலகுவேன்

### ஹரின் பெர்னாண்டோ அறிவிப்பு

கொழும்பு, மே.24

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியான வேளையில் தான் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று காலை அமைச்சராக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும், இல்லை என்றால் அரசாங்கத்தில் இருந்து விலகுவேன் என்ற கருத்தும் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.(அ)

# ஹற்றனில் பரீட்சை எழுதும் மாணவர் வருகையில் வீழ்ச்சி

கொழும்பு, மே. 24

நாடளாவிய ரீதியில் 2021ஆம் ஆண்டிற்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நேற்று ஆரம்பமாகியது.

இந்நிலையில் ஹற்றன் கல்வி வலயத்தில் இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் வருகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

ஹற்றன் வலயத்தில் மொத்தமாக 3,627 பாடசாலை பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றும் போதிலும் அதில் சுமார் 247 மாணவர்கள் நேற்று பரீட்சைக்கு சமூகமளிக்கவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# காரைநகர் - ஊர்காவற்றுறை பாதை சேவை எரிபொருள் இன்மையால் தடைப்பட்டது

யாழ்ப்பாணம், மே. 24

காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையே பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பாதைப் படகு கடந்த ஒரு வாரகாலமாக சேவையில் ஈடுபடுத்தப் படாமையால் அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மண்ணெண்ணெய் இன்மையாலேயே மேற்படி சேவை இடம்பெறவில்லை என வீதி அபிவிருத்தி அதிகார சபை பணியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாதைச் சேவையை நடத்துவதில் வீதி அபிவிருத்தி அதிகார சபை தொடர்ந்தும் அசமந்தப் போக்கையே கடைப் பிடித்து வருகின்றது என இதனூடாக பயணிப்போர் குற்றம் சாட்டுகின்றனர்.

பொறுப்புடைய ஒரு அரச நிறுவனம் மண்ணெண்ணெயை தேவைக்கேற்ப பெற்று வைத்திருந்து மக்களுக்கு சீரான சேவையை வழங்கவேண்டும். அதை விடுத்து, கடல் கடந்து போக்குவரத்துச் செய்யும் அரச பணியாளர்களை சிரமத்திற்கு உள்ளாக்குகின்றமை குறித்து அரச பணியாளர்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

பாதைச் சேவை இடம்பெறாமையால் தனியார் படகுகளில் மோட்டார் சைக்கிள்களை ஏற்றும்போது அவை சேதமடைகின்றன எனவும் உதிரிப்பாகங்களை அதிக விலைக்கு பெற்று சீர்செய்தாலும் அவை மீண்டும் சேதமடைகின்றன எனவும் கவலை வெளியிடுகின்றனர்.

இந்த விடயத்தில் யாழ். அரசாங்க அதிபர் கவனம் எடுத்து பாதைச் சேவை இடம்பெறுவதை உறுதிப்படுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# தென்னிலங்கையில் வன்முறை; தொடர்புடைய 1591 பேர் கைது!

கொழும்பு, மே. 24

மே 9 வன்முறை சம்பவம் தொடர்பில் இதுவரை 1,591 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

719 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 813 பேருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளதாக காவல்துறை பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# அண்ணனின் அறிவும் தம்பியின் மூடச்செயலும்



**அதிகாரத்தின் மீதான பிடியை தொடர்ந்து தங்கள் வசம் வைத்திருக்கும் முயற்சிகளை ராஜபக்சாக்கள் இன்னமும் கைவிடவில்லை**

முன்னாள் அமைச்சர் சமால் ராஜபக்ச தனது இளைய சகோதரர் மகிந்த ஜனாதிபதியாக இரண்டாவது பதவிக்காலத்தை பூர்த்தி செய்த பிறகு அரசியலை விட்டு வெளியேறியிருக்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் கூறியிருந்தார். இது அவர் தம்பியாருக்கு தனிப்பட சொல்லியிருக்கக்கூடிய விடயம். அதை அவர் ஏன் பாராளுமன்றத்தில் சொன்னார்?

மகிந்த மாத்திரமல்ல, ராஜபக்ச குடும்பத்தின் சகல உறுப்பினர்களுமே பிரச்சினையில் சிக்கியிருக்கிறார்கள். அவர்களது உடமைகள் கும்பல்களின் தாக்குதல்களுக்கு இலக்காகியிருக்கின்றன. அவர்களால் சுதந்திரமாக நடமாடமுடியாமல் இருக்கிறது. ஆத்திரமுற்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் ராஜபக்சாக்கள் மீது வசைமாரி பொழிகிறார்கள். அவர்களின் முன்னாள் ஆதரவாளர்களும் வெறுக்கிறார்கள். பலம்பொருந்திய ஆளும் குடும்பத்துக்கு இத்தகைய கதி நேரும் என்று ஒரு வருடத்துக்கு முன்னர் எவராவது நினைத்திருப்பார்களா?

முக்கியமாக, நாட்டு மக்களை மடையர்களாக நினைத்த காரணத்தினாலேயே ராஜபக்ச குடும்பம் இன்றைய ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. நாட்டை தங்களது கொத்தளம் என்று நினைத்த ராஜபக்சாக்கள் ஒரு அரசியல் காந்தமாக விளங்கிய மகிந்தவின் மண்ணிற சால்வையை பயன்படுத்தி நாட்டு மக்கள் மீது சவாரி விடலாம் என்று நம்பிக்கொண்டிருந்தார்கள். தொடர்ச்சியாக தேர்தல்களில் வெற்றிபெற்று மக்களை மடையர்களாக்கலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

2015 தேர்தல் தோல்வியில் இருந்து ராஜபக்சாக்கள் பாடங்களை கற்றுக்கொள்ளவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தின் மீது வெறுப்படைந்த மக்கள் 2019-2020 தேர்தல்களில் தங்களை மீண்டும் தெரிவுசெய்ததையடுத்து ராஜபக்சாக்கள் கர்வத்தனமானவர்களாக மாறினார்கள். அவர்களது தற்போதைய ஆட்சி 2005 -- 2015 மகிந்த ஆட்சியின் ஒரு மீள்சுழற்சியாகவே அமைந்தது. 2015 ஆண்டு மகிந்த மூனாறாவது பதவிக்காலத்துக்கு ஜனாதிபதியாக தெரிவாகியிருந்தால் இன்றையதைப் போன்ற சூழ்நிலையையே ராஜபக்சாக்கள் எதிர்நோக்கியிருப்பார்கள்.

மகிந்த மீதான சமாலின் கடிந்துரையை முழுமையாக ஏற்றுக்கொள்ளாமல் இருக்கமுடியவில்லை என்றாலும் அது காலந்தாழ்த்தியதாகவே இருக்கிறது. ஜனாதிபதியின் பதவிக்காலங்களுக்கு இருந்த வரையறையை இல்லாதொழித்த அரசியலமைப்புக்கான 18 வது திருத்தத்தை மகிந்த கொண்டுவந்தபோது அதை சமால் தடுத்திருக்கவேண்டும். அந்த நேரத்தில் அவர் பாராளுமன்ற சபாநாயகராக இருந்தார். அந்த 18வது திருத்தம் ராஜபக்ச குடும்பத்துக்கு மாத்திரமல்ல முழுநாட்டுக்குமே பெரும் சாபக்கேடாக மாறியது.

18 வது திருத்தத்தைப் போன்றே எதேச்சாதிகாரமான 20 வது திருத்தத்தை அவரது இன்னொரு தம்பியாரான ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச கொண்டுவந்தபோது அதை தடுப்பதற்கு சமால் அக்கறையுடனான முயற்சியை எடுத்திருக்கவேண்டும். இன்று ஆர்ப்பாட்டம் செய்யும் மக்களின் நெருக்குதல்களுக்கு பணிந்து 20வது திருத்தத்தை ஒழிப்பதற்கும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பதற்கும் கோட்டாபய தயாராவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அனுபவமுடைய ஒரு மூத்த அரசியல்வாதி என்ற வகையில் சமால்,அவரின் இன்னொரு தம்பியாரான பசில் ராஜபக்ச நிதியமைச்சராக நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்திருக்கவேண்டும். நிதியமைச்சரின் கடமைகளைச் செய்வதற்கு ஒருவர் நிபுணத்துவம் வாய்ந்தவராக இருக்கவேண்டும்.அறிவும் அனுபவமுமுடைய ஒருவர் நிதியமைச்சராக நியமிக்கப்பட்டு மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சின் நிபுணர்களின் உதவியுடன் அவர் சுதந்திரமாக பொருளாதார நெருக்கடியை கையாள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்காது. ராஜபக்சாக்களும் பாதுகாப்பாக இருந்திருப்பார்கள்.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் சிலரின் உதவியுடன் நாட்டை நிருவகிக்கமுடியும் என்று நினைத்த ஜனாதிபதி கோட்டாபயவுக்கு சமால் நல்வழியைக் காட்டியிருக்கவேண்டும். இந்த இராணுவ அதிகாரிகளின் பரிதாபகரமான செயற்பாடுகளை நோக்கும்போது உலகிலேயே மிகவும் பயங்கரமான இயக்கம் என்று வர்ணிக்கப்பட்ட விடுதலை புலிகளை எவ்வாறு இவர்கள் தோற்கடித்தார்கள் என்று வியக்கவேண்டியிருக்கிறது. கோட்டாபயவுக்கு பின்னால் அணிதிரண்டு 2019 ஜனாதிபதி தேர்தலில் அவரது வெற்றியைச் சாத்தியமாக்கிய அறிவுஜீவிகள் என்று சால்லப்படுவோர் இன்று இகழ்ச்சிக்குள்ளாகியிருக்கிறார்கள். இன்றைய ஜனாதிபதியையும் சமால் கடிந்துரைத்தாரா?

ராஜபக்ச குடும்பம் அதிகாரத்தின் மீதான தங்கள் பிடியை தொடர்ந்தும் வைத்திருப்பதற்கான முயற்சிகளைக் கைவிடவில்லை. பாராளுமன்றத்தில் எம்.பி. க்களின் எண்ணிக்கையுடன் அவர்கள் விளையாடுவதையும் போட்டிக்கட்சிகள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்து வதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளையும் பார்க்கும்போது இதை விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

ராஜபக்ச குடும்பம் ரணில் விக்கிரமசிங்கவை பிரதம ராக நியமித்துவிட்டு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அதிருப்தியாளர் குழுவில் இருந்து எம்.பி.க்களை கட்சி மாறத்தூண் டிக்கொண்டிருக்கிறது. ஆனால் பணத்தைக்காட்டி கட்சி மாறல்களைத் தூண்டுவதல்ல மக்களின் அபிப்பி ராயமே முக்கியமானது. அந்த அபிப்பிராயம் ராஜபக்சாக்களுக்கு அனுகூலமானதாக இல்லை என்பது வெளிப்படையானது.

**(த ஜலண்ட் ஆசிரிய தலையங்கம்,21மே 2022)**

# ஆர்.எஸ்.நடராஜா - இலங்கையின் புகழ்பூத்த ஆசிரியர் கல்வியியலாளர்

இலங்கையில் புகழ்பூத்த ஆசிரியர் கல்வியியலாளர்களில் ஒருவரான ஆர்.எஸ்.நடராஜா எளிமை, தன்னடக்கம், ஆழ்சிந்தனை, கருணை, மனித நேயம் முதலிய உயர் மானிட பண்புகளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். “ஆர்எஸ்” என அனைவராலும் நேசிக்கப்பட்டவர்.

1933 ஆம் ஆண்டு நெடுந்தீவில் பிறந்த ஆர்.எஸ் அவர்கள் தனது பாடசாலைக் கல்வியை நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும் பெற்ற பின்னர் 1958 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி ஆனார். 1969 வரை கிழக்கு மாகாணத்தில் கல்முனை பாத்திமா கல்லூரியிலும் தம்பிலுவில் மகாவித்தியாலயத்திலும் பின்னர் வடமாகாணம் ஏழாலை மகா வித்தியாலயத்திலும் ஆசிரியராகப் பணிபுரிந்த ஆர்.எஸ் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் டிப்ளோமாவைப் பெற்றுக் கொண்ட பின்னர் யாழ்ப்பாணம் விக்டோரியாக் கல்லூரியில் பணி புரிந்து பின்னர் கொழும்புத்துறை ஆசிரியர் கல்லூரியில் விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

1971-1972 காலகட்டத்தில் இக்கட்டுரையாளருக்கு ஆர்.எஸ் அவர்களின் மாணவராக இருந்து பயிலும் வாய்ப்பு கிடைத்தது. கல்வி உளவியல், கல்வி வரலாறு, கல்வித்தத்துவம் ஆகிய பாடங்களில் ஆழ்ந்த அறிவும் புலமையும் கொண்டவராக விளங்கிய ஆர்.எஸ் ஆசிரியர் மாணவர்களின் அன்புக்கும் மரியாதைக்கும் பாசத்துக்குமுரிய பண்பாளராக விளங்கினார். தனது ஆழ்ந்த புலமையையும் இடையிடையே நகைச்சுவைத் துணுக்குகளையும் வெளிப்படுத்திக் கற்பிப்பது ஆர்.எஸ் அவர்களின் தனிக் கலையாகும். அரை நூற்றாண்டு காலத்துக்குப் பின்னர் இன்னும் கூட அவரது கற்பித்தலின் கருத்துக்களும் நகைச்சுவைகளும் நெஞ்சில் நிலைத்துள்ளன. கல்வியியலை மட்டுமல்லாது மானிடத்தையும் அவர் எமக்கு கற்பித்தார். பின்னாளில் நானும் எனது சக மாணவர்கள் பலரும் கல்வித்துறையில் ஒரு சிறு பதிவையேனும் ஏற்படுத்துவதற்கு அடித்தளம் இட்டவர் ஆர்.எஸ் அவர்களே ஆவார் என்பதை நான் மிகப் பெருமையுடன் பதிவு செய்ய விரும்புகிறேன்.

1975 முதல் பணியிலிருந்து ஓய்வு பெறும் வரை சுமார் இருபது ஆண்டுகள் ஆர்.எஸ் அவர்கள் பலாலி ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகவும் துணை அதிபராகவும் இறுதியாக அதிபராகவும் பணியாற்றியவர். வடக்கில் மக்கள் அதீத துன்பங்களை அனுபவித்த அக்காலத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலையைக் கட்டிக்காத்து வளர்த்தெடுத்த பெருமை ஆர்.எஸ் அவர்களையே சாரும். நன்றி மறவாத கலாசாலை சமூகத்தினர் அவர் ஓய்வு பெற்ற நாளான 1995-06-30 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் சேவைநலன் பாராட்டு மலரை வெளியிட்டு தமது ஆசானைக் கௌரவித்தனர். வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, அரச அதிபர் சா.மாணிக்கவாசகர், பிரதேசக் கல்விப்பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம், பேராசிரியர் சி.சற்குணராசா, பேராசிரியர் ஆறுமுகம் முதலிய பெருமக்கள் ஆர்.எஸ் அவர்களைப் பற்றிய தமது மனப்பதிவுகளை மேற்படி பாராட்டு மலரில் பதிவு செய்திருந்தனர்.

ஆர்.எஸ் ஓய்வு பெற்ற பின்னரும் தமது கல்விப்பணிகளை கொழும்பில் தொடர்ந்தார். தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு ஆகியவற்றின் கல்விச் செயற்பாடுகளுக்குத் தமது உயரிய பங்களிப்புகளை தொடர்ச்சியாக வழங்கி வந்த அவர் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தார்.

அன்பும் பண்பும் பணிவும் நிறைந்த அவரது அன்புத் துணைவியார் சிவயோகரத்தினத்தின் மறைவு ஆர்.எஸ் அவர்களைப் பெரிதும் பாதித்தது. நாங்கள் கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை மாணவர்களாக இருந்த காலத்தில் ஆர்.எஸ் அவர்கள் மலையக மாணவர்களாகிய எம்மை அவரது இளவாலை இல்லத்துக்கு அழைத்து உபசரிப்பது வழக்கமாக இருந்தது. அவரது துணைவியான அம்மையாரின் பாசம் மிகுந்த உபசரிப்பினை இன்றும் நான் நினைவில் வைத்துள்ளேன்.

அம்மையாரின் மறைவுக்குப் பின்னர் ஆர்.எஸ் அவர்கள் கொழும்பில் தனது பிள்ளைகளினுடயே வாழ்ந்து வந்தார். அவரது ஐந்து மக்களில் (கலாமதி, நவராசா, சுதாமதி, சாந்திமதி, மதுமதி) இருவர் இலங்கையிலும் ஏனையோர் வெளிநாடுகளிலும் வசித்துவருகின்றனர். அடிக்கடி வெளிநாடுகளுக்கு விஜயம் செய்து தனது பிள்ளைகளின் குடும்பங்களுடன் சில மாதங்களை செலவிட்டு வருவதையும் ஆர்.எஸ் வழக்கமாகக் கொண்டிருந்தார்.



பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபரான ஆர்.எஸ்.நடராஜா அவர்கள் சிறு சுகவீனத்துக்குப் பின்னர் கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பில் மரணமடைந்தார். திங்கட்கிழமை 23ஆம் திகதி இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

பதினொரு பேரப்பிள்ளைகளைக் கண்டு பெருவாழ்வு வாழ்ந்த ஆர்.எஸ் அவர்கள் இன்று எம்முடன் இல்லை என்பது நெஞ்சத்தைக் கனக்க வைக்கின்றது. எனினும் இன்று இலங்கையிலும் வெளிநாடுகளிலும் சீரிய கல்விப்பணி புரிந்து வரும் அவரது ஆயிரக்கணக்கான மாணவர்களின் நெஞ்சங்களில் அவர் என்றும் பெருமையுடனும் அவருக்கேயுரிய புன்னகையுடனும் வீற்றிருப்பார். தமது வாழ்நாள் முழுதும் சீரிய அர்ப்பணிப்புடன் கல்விப்பணி புரிந்த ஆர்.எஸ் அவர்களது திருநாமம் என்றும் நிலைத்திருக்கும்.

**பேராசிரியர் தை.தனராஜ்**
(இலங்கை தகவல் தொழில்நுட்பவியல் நிறுவகம் - SLIIT)

# ராஜபக்ச பதவி விலகுவது மாத்திரமல்ல, பொறுப்புக்கூறலுக்கும் முகங்கொடுக்கவேண்டும்

- கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து

இலங்கையின் புதிய பிரதமர் ஒருவர் கடந்தவாரம் பதவியேற்றுக்கொண்டார். ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க அவரது நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான கால அரசியல் வாழ்வில் ஏற்கெனவே பிரதமர் பதவியை பல தடவைகள் வகித்திருக்கிறார்.

இலங்கை சுதந்திரத்துக்கு பின்னரான அதன் வரலாற்றில் முன்னென்றுமே கண்டிராத பாரதூரமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், நாட்டை நிலைப்படுத்துவதற்குரிய ஒரு நபராகவே அவரை பாராளுமன்றம் நினைக்கிறது என்பது தெளிவானது. ஆனால், அபகீர்த்திக்குள்ளாகியிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலகவேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்களினால் திரும்பத்திரும்ப முன்வைக்கப்படுகின்ற முக்கியமான கோரிக்கைக்கு இணங்காமல் இது வெறுமனே ஆட்களை மாற்றுகின்ற ஒரு விளையாட்டாகவே இருக்கிறது.

கொழும்பு ஒரு தீப்பற்று பெட்டியாக காணப்படுகிறது. நாடு வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது. பொருட்களுக்கு பாரதூரமான தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் நிலையில், மனிதாபிமான நெருக்கடியொன்று மூண்டுகொண்டிருக்கிறது. மக்களின் அன்றாட வாழ்வு அத்தியாவசிய பொருட்களுக்காக நீண்ட வரிசைகளில் காத்துநிற்பதி லேயே கழிவதால் எந்த நிமிடத்திலும் தன்னியல்பான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறக்கூடிய சூழ்நிலையே காணப்படுகிறது. இலட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்ற அதேவேளை, பொதுவேலை நிறுத்தங்கள் அடிக்கடி நாட்டை முடக்குகின்றன.70 வருடகாலத்தில் ஏற்பட்டிருக்கும் மோசமான பொருளாதார

நெருக்கடிக்கு ஜனாதிபதி ராஜபக்சவின் குழப்பகரமான தீய ஆட்சியே முற்றிலும் பொறுப்பு என்று மக்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். அவர் பதவி விலகவேண்டும் என்று மாதக்கணக்காக விடுக்கப்பட்டு வருகின்ற கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்காயின. அதனால் பெரும் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டிருக்கிறது.

அவரின் சகோதரர் மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியில் இருந்து அண்மையில் விலகினார். ஆனால் அது ஆர்ப்பாட்டக்காரர்களை பெரிதாக அமைதிப்படுத்தவில்லை. அவர் பதவியில் இருந்து விலகியபோது இறுதியாக நடந்து கொண்ட விதம் இன்றைய நெருக்கடிக்கு வழிவகுத்த நடத்தைகளை அம்பலப்படுத்தி நிற்கிறது. பதவிவிலகவேண்டும் என்று கோரி நடைபெற்றுவந்த மாதக் கணக்கான ஆர்ப்பாட்டங்களை அலட் சியம் செய்த அவர் தனது உத்தியோக பூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகை முன்பாகவும் காலிமுகத்திடலிலும் அடாவடித்தனத்துக்கு காரணமானார். இறுதியில் அவர் நாட்டின் இன்னொரு அந்தலையில் இருக்கும் இராணுவ முகாமில் தஞ்சமடைய வேண்டியேற்பட்டது.

அவர் நாட்டை விட்டு வெளியேற முடியாதவாறு நீதிமன்றம் தடையுத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. ஐக்கிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவதற்காக வழிவிடுவதற்காகவே தான் பதவியில் இருந்து விலகியதாக கூறும் அவர் நாட்டில் பயங்கரமான முரண்பாடுகளை விதைத்துவிட்டே சென்றார்.

முன்னாள் பிரதமர் நேரடியாக வன்முறைக்கு அழைப்பு விடுக்கவில்லை என்றபோதிலும், அவரது சகபாடிகளும் உதவியாளர்களும் பஸ்களில் குண்டர்களை ஏற்றிவந்து ஆத்திரமூட்டும் உரைகளை நிகழ்த்தினர். அது அந்தக் குண்டர்கள் அமைதிவழி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொல்லுகளாலும் இரும்புக்கம்பிகளாலும் தாக்குதல் நடத்தத்தூண்டியது. இதையடுத்து எதிரணிக்குழுக்கள் உடனடியாகவே பதிலடி கொடுக்க ஆரம்பித்தன. பஸ்கள் தலைகீழாக புரட்டிவிடப்பட்டன. அரசாங்க சார்பு அரசியல்வாதிகளின் சொத்துக்கள் தீவைக்கப்பட்டன. ஒன்பது பேர் கொல்லப்பட்டதுடன் 200க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

நாடளாவிய ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு கலவரம் விளைவிப்பவர்களை கண்ட இடத்தில் சுடுவதற்கு துருப்புகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதையடுத்து அடுத்து வந்த நாட்களில் அமைதி திரும்பியது.

உணவு வகைகள், எரிபொருட்கள் மற்றும் மருந்து வகைகளின் விலைகள் நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு உயர்திருக்கின்றன. நாட்டு மக்கள் பொறுமை யின் எல்லைக்கு சென்று மனக்கலக்கம் அடைந்திருக்கிறார்கள். இலங்கை இன்று பிச்சைப்பாத்திரத்துடன் உலக நாடுகளின் கதவைத் தட்டவேண்டிய அளவுக்கு தரமிறங்கியிருக்கிறது. ஆனால் அது கூட குழப்பத்துக்குள்ளாகியிருக்கிறது. அரசாங்க அதிகாரிகள் அவசரகால நிதிக்காக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவிருக்கிறார்கள். இலங்கையின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு வெறுமனே 5 கோடி டொலர்களாக வீழ்ச்சி கண்டுவிட்டது.

அவசர உதவி தேவைப்படுகிறது. ஆனால் அதற்கு கொடுக்கவேண்டிய விலை என்ன? குழப்பகரமான நிலையில் நாட்டுக்கு தலைமை தாங்கும் ஜனாதிபதி தீண்டத்தகாதவராக மக்களால் கருதப்படுகின்ற அதேவேளை, பாராளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனத்தை மாத்திரம் கொண்டிருக்கும் ஒருவரை பிரதமராக நியமிப்பதன் மூலம் மக்களின் சீற்றத்தை அடக்கிவிடமுடியாது என்பதை சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தும் அரசாங்க அதிகாரிகள் தெரிந்து கொள்ளவேண்டும். தவிர்க்க முடியாத சிக்கன நடவடிக்கைகளை தாங்கிக் கொள்ளவேண்டியிருக்கின்ற சூழ்நிலையின் ஊடாக நாட்டை வழிநடத்த மதிப்புக்குரிய நம்பகத் தன்மையான தலைவர் ஒருவர் தேவை. மற்றும்படி மக்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்.

ராஜபக்ச வீட்டுக்கு போகவே வேண்டும். அதை விடுத்து வேறு வழி தேடினால் மேலும் உறுதிப்பாடின்மையும் வன்முறையுமே நேரும். மாற்றத்துக்கான அரிய வாய்ப்பும் பாழடிக்கப்படும். ராஜபக்ச என்ற குடும்பப் பெயரைக்கொண்ட வேறு மூன்று அமைச்சர்கள் ஏற்னெவே கடந்தவாரம் பதவி விலகினார்கள். மிகவும் நீண்டகாலமாக ஊழல்தனமான ஒரு குடும்பத்தினாலேயே தாங்கள் ஆளப் பட்டு வந்தார்கள் என்ப தையும் அவர்களில் எவ ருமே இனிமேல் அதிகாரத் தில் விட்டுவைக் கப்படக் கூடாது என்பதையுமே இது நாட்டு மக்களுக்கு நினைவூட்டுகிறது.

பரந்தளவு ஆதரவைக் கொண்டிருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவதை மாத்திரம் விரும்பவில்லை. அவரது தவறான முகாமைத்துவத்துக்காகவும் ஊழல் மற்றும் பல தசாப்தங் களாக முன்வைக் கப்பட்டுவரும் மனித உரிமைமீறல்கள் குற்றச் சாட்டுகளுக்காகவும் அவர் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர்கள் கோருகிறார்கள். பழையவர்களை மாற்றி மாற்றி அமைச்சர்களாக நியமிப்பதையல்ல, புதியதொரு இலங்கையை ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடிநிற்கிறார்கள். ஆனால் பழையவர்களே இன்னமும் பொறுப்பான பதவிகளில் தொடரும் நிலையில் அரசியலில் அடிப்படையான மாற்றம் நிகழமுடியாது.

ராஜபக்சாக்களுக்கு சட்டத்தில் இருந்து விதி விலக்கு அளிப்பது குறித்த சிந்தனையை அரசியல்வாதிகள் வளர்த்துக் கொள்ளக் கூடாது. அவ்வாறு செய்வதை துரோகச் செயலாகவே மக்கள் நோக்குவார்கள்.

ராஜபக்ச எந்தளவுக்கு அதிகாரத்தில் இருக்கிறாரோ சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அவசர உதவிக ளைப் பெறுவது அந்தள வுக்கு தாமதமாகும். மக்கள் பட்டினி கிடக்க வேண்டிவரும். எந்தளவு தூரத்துக்கு மக்கள் பட்டினி கிடக்கிறார்களோ அந்தளவு தூரத்துக்கு ஆர்ப்பாட்டங்கள் இடைவிடாமல் தொடரும். அமைதியின்மை எந்தளவுக்கு கூடுதலாக இருக்கிறதோ அந்தளவுக்கு ராஜபக்ச கூடுதல் வன்முறையில் நாட்டம் காட்டக்கூடிய ஆபத்து இருக்கிறது.

மக்களின் இந்த அமைதிவழிப் போராட்ட இயக்கத்தை ஒடுக்குமாறு பிறப்பிக்கப்படக்கூடிய உத்தரவுகளை பொலிஸூம் இராணுவமும் பின்பற்றுவதை அரசாங்கத்தினால் நிச்சயமாக உத்தரவாதப்படுத்த முடியாது. சாதாரண படைவீரரினதும் பொலிஸ் காரர்களினதும் குடும்பங்கள் அதே பொருளாதாரப் பிரச்சினையால் கஷ்டப்படுகின்றன.

கோட்டையில் வெடிப்புகள் தோன்றுகின்றன. தவிர்க்கமுடியாத வீழ்ச்சி எம்மெல்லேரையும் நசுக்கி விடக் கூடாது என்று நம்புவோமாக.

(அல் ஜஸீரா)



> ஆர்ப்பாட்டக்காரர்கள் விரும்புவது புதியதொரு இலங்கையையே தவிர, பழைய ஆட்களை மீண்டும் மாற்றி நியமிப்பதையல்ல



# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

06) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ......................................... (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

07) **பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் .........................................................................

ii) ....................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

08) **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ..............................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................... (2 புள்ளிகள்)

09) **பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை .............................. (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

10) **தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ...............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : ..................................................... (2 புள்ளிகள்)

11) **கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

12) **தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

13) **பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ..............................................................................

ii) old / How / you? / are : ........................................................................................ (2 புள்ளிகள்)

14) **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ..............................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

15) **பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ........................................................................................

ii) அங்கே பாருங்கள் : ........................................................................................ (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

16)

| | |
|---|---|
| 7 | 8 |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..............................................................

17) ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..............................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

கல்வி tv CHANNEL-1

**17.05.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**17.05.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## வைத்தியசாலையில் உயிரை மாய்த்த நோயாளி

மட்டக்களப்பு, மே. 24

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர், வைத்தியசாலை விடுதி மலசலகூடத்தில் வைத்து நேற்று முன் தினம் இரவு தனது உயிரை மாய்த்துக்கொண்டார்.

வவுணதீவு, நாவற்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய சிவலிங்கம் தட்சணாமூர்த்தி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் ஒரு மனநோயாளி என்றும் அதற்கான சிகிச்சையை பெற்றுக்கொள்வதற்காகவே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதியில் உள்ள நோயாளிகளை வைத்தியர் பார்வையிட்டுச் சென்றதன் பின்னர் குறித்த நபர் மலசலகூடம் சென்றிருந்தார். நேடுநேரமாகியும் அவர் வெளியே வராததையடுத்து, அவருக்கு உதவியாக இருந்த உறவினர் கதவைத் திறந்துபோது, உடுத்திருந்த சாரத்தைப் பயன்படுத்தி, மலசலகூட ஜன்னல் கம்பியில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து நீதிமன்ற உத்தரவை பெற்று சடலத்தை பிரேத பரிசோதனைக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு அம்பாறையில் தலா 5 ஆயிரம் ரூபா!

அம்பாறை, மே. 24

**அம்பாறை மாவட்டத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபாய் நிவாரணக் கொடுப்பனவு வழங்குவதற்கென 2,002 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம் சப்றாஸ் தெரிவித்தார்.**

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சுழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இம்மாதம் முதல் ஜூலை மாதம் வரை மாதாந்தம் 5,000 ரூபாய் நிவாரண கொடுப்பனவு, இவ்வாரம் முதல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்து.

நாளாந்த வருமானத்தை இழந்துள்ள, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், சமுர்த்திப் பயனாளிகள், சமுர்த்தி பெறுவதற்கு காத்திருப்புப் பட்டியலில் உள்ளோர் ஆகியோருக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினூடாக இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலகங்களை ஒருங்கிணைத்து 43 சமுர்த்தி வங்கிகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதனடிப்படையில், அம்பாறை மாவட்டத்தில் 89,438 சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களும், 30,848 சமுர்த்தி பெறுவதற்கு காத்திருப்புப் பட்டியலில் உள்ள குடும்பங்களுக்கும், வருமானம் குறைந்த குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## படகில் ஹெரோய்ன், ஐஸ் போதைப்பொருள் மீட்பு

மட்டக்களப்பு, மே. 24

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள மீன்பிடித் துறைமுகத்தில் படகு ஒன்றில் இருந்து 09 கிராம் 210 மில்லிகிராம் ஹெரோய்னும் 01 கிராம் 110 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருளும், விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன் தினம் மாலை மீட்கப்பட்டுள்ளன.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, விசேட அதிரடிப் படையுடன் இணைந்து இராணுவ புலனாய்வு பிரிவினர், வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ட்றோலர் படகை முற்றுகையிட்டு சோதனையிட்டனர்.

இதன்போது மேற்படி போதைப்பொருட்கள் மீட்கப்பட்டதுடன், அங்கு போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிறைச்துறைச் சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயது இளைஞனை கைதுசெய்து, வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (அ)

## பெற்றோல் கடத்திய இரண்டு பேர் கைது

மட்டக்களப்பு, மே. 24

மட்டக்களப்பு - வெல்லாவெளி பிரதேசததில் இருந்து அம்பாறை மகா ஓயா பிரதேசத்திற்கு பெற்றோலை கடத்திச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மகாஓயா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் 45 வயதுடைய பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் ஓய்வு பெற்ற 41 வயதுடைய இராணுவ சிப்பாய் ஆகிய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லாவெளி வீதிச் சோதனைச் சாவடியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டதுடன், 910 லீற்றர் பெற்றோலும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## உணவுப் பாதுகாப்பு தொடர்பான தேசிய வேலைத்திட்டம் ஆரம்பம்



அம்பாறை, மே. 24

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து எதிர் வருகின்ற காலங்களில் நாடும் நாமும் எதிர்கொள்ளவிருக்கும் உணவு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக நாடளாவிய ரீதியில் உணவு பாதுகாப்பு தொடர்பான தேசிய வேலைத் திட்டம் நேற்று திங்கட்கிழமை கல்முனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு இஸ்லாமாபாத் கிராமத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சேனைக்குடியிருப்பு விவசாய போதனசிரியர் டீ.செந்தூரன், தொழில் நுட்ப உதவியாளர் எல். தீபாலினி,பெரியநீலாவனை தொழில்நுட்ப உதவியாளர் திருமதி ஹேமஜோதி நிலோசன், கல்முனை விவசாய போதனாசிரியர் திருமதி எஸ். கிரித்திகா,சமூர்த்தி முகாமையாளர்களான எஸ்.பரீரா,ஏ. எம்.எஸ் நயீமா அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் வீட்டு தோட்ட பயிர் செய்கை பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

மர க்கன்றுகள், விதை பக்கற்றுக்கள் மற்றும் மர வெள்ளி கிழங்கு கம்புகள் என பயனாளிகளுக்கு இந்த நிகழ்வில் வழங்கப்பட்டன. (அ)

## ஊடகவியலாளர் ஐ.நடேசனின் 18 ஆவது ஞாபகார்த்த நிகழ்வு

மட்டக்களப்பு, மே. 24

மட்டக்களப்பில் வைத்து கடந்த 2004 ஆண்டு சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சிரேஸ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18 ஆவது ஞாபகார்த்த தினம் எதிர்வரும் 31 ஆம் திகதி நினைவு கூரப்படவுள்ள நிலையில், அதனை முன்னிட்டு ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18 ஆவது ஞாபகார்த்த நிகழ்வும் "ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்" கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இ.தேவஅதிரன் தலைமையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் 29ஆம் திகதி காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வின்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, நினைவுச் சுடரேற்றப்பட்டதைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப் பட்டு, மௌன அஞ்சலியும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும், சிவராம் ஞாபகார்த்த மன்றமும் (சுவிஸ்) இணைந்து வெளியிடவுள்ள "ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்" கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் வரவேற்புரையை கிழக்கு ஊடகவிய லாளர் ஒன்றிய உபதலைவர் க.ஜெகதீஸ்வரனும், தலைமையுரையினை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான, இ.பாக்கியராஜா நிகழ்த்தவுள்ளதுடன், நூல் வெளியீட்டுரையினை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் இ.தேவ அதிரன் நிகழ்த்தவுள்ளார்.




கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான ஏ.எல்.எம்.சலீமினால் குறித்த நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளதுடன், சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.நிக்சன் மற்றும் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான இரா.துரைரெத்தினம் ஆகிய இருவரினாலும் ஊடகர் ஜீ.நடேசன் தொடர்பான சிறப்பு நினைவுப் பகிர்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக் கட்டுரைத் தொகுப்பு நூலில் நடேசனின் நண்பர்கள், பத்திரிகையாளர்கள், நெருக்கமானவர்கள் எனப் பலரும் தமது நினைவகளைப் பகிர்ந்துள்ளனர். கடந்த 2021ஆம் ஆண்டு 17ஆவது ஞாபகார்த்த தினத்தில் வெளியிடவென உத்தேசிக்கப்பட்டிருந்த போதும் கொவிட் சூழல் காரணமாக குறித்த நூல் வெளியீடானது பிற்போடப்பட்ட நிலையில் இவ்வருடம் வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்விற்கு அனைத்து ஊடகவியலாளர்களையும், சமூக நலன் விரும்பிகள், மதகுருமார், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களையும் இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு ஒன்றியத்தின் செயலாளர் வ.சக்திவேல் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

# உலகை அச்சுறுத்தும் மூன்று பேராபத்துகள்!

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

ஜெனிவா, மே 24

கோவிட் பெருந்தொற்று நோய், உக்ரைன்மீதான ரஷ்யாவின் போர் மற்றும் குரங்கம்மை தொற்று நோய் என உலகம் தற்போது பல வலிமை யான சவால்களை எதிர்கொண்டு வருகிறது என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் எச்சரித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் தலைமையகத்தில் அவர் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். இதன்போது, "ஆபிரிக்காவிற்கு வெளியே 15 நாடுகளில் குரங் கம்மை நோய் தொற்று பரவிவியுள் ளதை ஐ. நா. சுகாதார அமைப்பின் நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.



ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் இஸ்ரே லில் 80க்கும் மேற்பட்ட குரங்கம்மை தொற்று நோயாளிகள் உறுதி செய் யப்பட்டுள்ளனர். எனினும், குரங் கம்மை தொற்றால் பொதுமக்க ளுக்கு பெரிய ஆபத்துக்கள் இது வரை இல்லை என்பது உணரப் பட்டுள்ளது.

குரங்கம்மை மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்காவின் தொலை தூர பகுதிகளில் மிகவும் பொதுவாக பரவும் வைரஸாகும். இந்த வைரஸ் மக்களிடையே எளிதில் பரவாது அத்துடன், அதன் பாதிப்புகளும் இலேசானவை - - என்றார்.

இதனிடையே, குரங்கு அம்மை நோய்க்கான தடுப்பூசி எதுவும் இது வரை இல்லை. ஆனால், பெரி யம்மை நோய்க்கு வழங்கப்படும் தடுப்பூசி 85 வீத பாதுகாப்பை வழங்குகிறது. ஏனெனில், இரண்டு வைரஸ்களும் பெரும்பாலும் ஒத் தவை என சுகாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். (ஐ)



## முகத்தை மறைக்குமாறு கட்டாயப்படுத்துகின்றனர்!

### ஆப்கான் செய்தியாளர்கள் கவலை

காபூல், மே 23

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் கட்டளையை ஏற்று பெண் செய்தி வாசிப்பாளர்கள் தங்கள் முகங் களை மறைத்தே செய்தி வாசிக்கின்றனர். இந்நிலையில், தாம் கட்டாயத்தின் பேரிலேயே இவ்வாறு செய்தி வாசிக்கின்றனர் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தலிபான்களின் ஆட்சிக்குள் வந்துள்ள ஆப்கானிஸ் தானில் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரும் போது நீலநிற புர்கா அணிந்தே வரவேண்டும் என்ற கட்டாய உத்தரவு உள்ளது. தலிபான்களின் இந்த உத்தரவுக்கு சர்வதேச அளவில் எதிர்ப்பு வெளியிடப் பட்டது. ஆனால், தலிபான்கள் தமது கட்டளையில் உறுதியாக இருந்தனர்.

இந்நிலையில், ஆப்கானின் பிரதான செய்தி நிறு வனங்களாக டோலோ, ஷம்ஷாத், அரியானா ஆகியவற்றில் பெண் செய்தி வாசிப்பாளர்கள் முகத்தை மூடியபடி நேற்று செய்தி வாசித்தனர்.

இது குறித்து சோனியா நியாசி (டோலோ நிறுவ னத்தின் செய்தியாளர்) கூறும்போது, " நாங்கள் முகத்தை மறைக்கும் முடிவை எதிர்த்தோம். ஆனால், டோலோ நிறுவனம் முகத்தை மறைக்காத செய்தி வாசிப்பாளர்கள் வேறு பணிக்கு மாற்றப்படுவார்கள் அல்லது பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்று கூறியது. நிறுவனம் கட்டாயப்படுத்தியதாலேயே நாங்கள் புர்கா அணிந்தோம்" என்றார்.

இதில் பெண்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் சில ஊடகங்களில் ஆண்களும் தங்கள் முகத்தை மறைக்கும் முகமூடி அணிந்திருந்தனர்.

ஆப்கானில் தலிபன்களுக்கு ஆட்சிக்கு முன்னர் பெண் செய்தியாளர்கள் வெறும் தலையை மட்டும் மறைக்கும் விதமாக ஹியாப் அணிந்தே செய்தி வாசித்த னர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிங்கத்தை சீண்டியவர் கை விரலை இழந்தார்!

கிங்ஸ்ரன், மே 24

ஜமைக்காவின் மிகப்பெரிய உயிரின பூங்காவில் பராமரிக்கப் படும் சிங்கத்தை சீண்டி விளையா டிய பணியாளர் ஒருவர் தனது விரலை இழந்தார். இந்த காணொலி உலகம் முழுவதும் அதிகம்பேரால் பார்க்கப்பட்டுள்ளது.

தான் சிங்கத்துடன் சீண்டி விளையாடுவதை காணொலியாக எடுத்து அதை பிரபலமாக்கும் ஏற்பாட்டுடனேயே அவர் இதில் ஈடுபட்டார். அவர் சீண்டி விளை யாடுவதை பார்வையாளர்களும் காணொலியாகப் பதிவு செய்தனர்.

பராமரிப்பு ஊழியர், இரும்பு வேலிக்குள் இருந்த சிங்கத்தின் முகத்தில் தனது கையால் வருடி விடுவது போலவும், தள்ளுவது போலவும் செய்து கொண்டிருந்தார். ஆரம்பத்தில் அமைதியாக இருந்த சிங்கம் ஒரு கட்டத்தில் கோபமடைந்து அவ ரின் விரல்களை வாயில் கௌவிப் பிடித்தது.

சிங்கத்தின் வாய்க்குள் அகப்பட்ட விரலை மீட்பதற்காக அவர் போராடினார். அவரின் போராட்டத்தையும் பார்வையா ளர்கள் சீண்டல் என்று கருதி அதை யும் காணொலியாக பதிவு செய்த னர். ஒரு கட்டத்தில் சிங்கம் ஊழி யரின் ஒரு விரலை கடித்து விழுங் கிவிட்டது. இதையடுத்து மீட்கப் பட்ட அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## உக்ரைனுக்கு எதிரான போரில் 29,200 ரஷ்ய படையினர் மரணம்!

கீவ், மே 24

போர் தொடங்கியது முதல் 29 ஆயிரத்து 200 இரா ணுவத்தினரை ரஷ்யா இழந்துள்ளது என்று உக்ரைன் தெரிவித்துள்ளது.

உக்ரைன்மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் போரை தொடங்கியது. போர் நிறுத்தம் இதுவரை பலனளிக்காத நிலையில், ரஷ்யா உக்ரைனின் பல நகரங்களை தாக்கியதுடன், சில முக்கிய இடங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது.

கடுமையாக இரு தரப்புகளும் போர் செய்துவரும் நிலையில், போர் தொடங்கியதில் இருந்து இதுவரை 29,200 ரஷ்ய வீரர்கள் பலியாகினர் என்று உக்ரைன் தெரிவித்தது.

மேலும், ரஷ்யாவின் 1,293 ஆயுதப் போர் டாங்கி கள், 3,166 போர் கவச வாகனங்கள், 604 பீரங்கி அமைப்புகள், 93 வான் பாதுகாப்பு அமைப்புகள், 204 போர் விமானங்கள், 170 ஹெலிகொப்டர்கள், 110 கப்பல் ஏவுகணைகள், 13 போர்க் கப்பல்கள் உள்ளிட் டவற்றையும் உக்ரைன் படைகள் அழித்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## புதவியேற்ற கையோடே ஜப்பான் பறந்தார் அவுஸ்திரேலிய பிரதமர்

சிட்னி, மே 24



அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராக அந்தோனி அல்பானீஸ் நேற்று பதவி யேற்றார். பதவியேற்ற கையு டன் குவாட் நாடுகள் என்று அழைக்கப்படும் அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் தலை வர்களை சந்திப்பதற்காக அவர் டோக்கியோ புறப் பட்டுச் சென்றார்.

அவுஸ்திரேலியாவில் கடந்த சனிக்கிழமை நடந்த பொதுத் தேர்தலில் ஸகொட் மோரிசனின் பழமைவாத அரசாங்கத்தை அல்பானீஸின் தொழிலாளர் கட்சி தோற்கடித்தது.

எனினும், அவரது அரசாங்கம் தனித்து பெரும் பான்மையை நிரூபிக்குமா? அல்லது சிறு கட்சிகள், சுயேச்சைகளின் ஆதரவுடன் ஆட்சி அமைப்பாரா? என்பது தெளிவாகத் தெரியவில்லை.

பிரதமர் அந்தோனி அல்பானீஸ் உடன் ஜப்பான் குவாட் உச்சிமாநாட்டுக்குச் செல்லும் புதிய வெளி யுறவு அமைச்சர் பென்னி வோங் உட்பட நான்கு முக் கிய அமைச்சரவை உறுப்பினர்களும் பதவியேற்றனர்.

பதவியேற்ற கையுடன் இந்தியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய 4 நாடு கள், குவாட் உச்சிமாநாட்டில் பங்கேற்க பிரதமர் அந்தோனி அல்பானீஸ் புறப்பட்டு ரோக்கியோ சென்றார்.

குவாட் என்னும் நாற்கர பாதுகாப்பு அமைப்பில் இந்தியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் அவுஸ்திரே லியா ஆகிய 4 நாடுகள் இணைந்து செயல்படுகின்றன. இந்த அமைப்பின் தலைவர்கள் நேரடியாக பங்கேற்கிற 2ஆவது உச்சி மாநாடு இதுவாகும். (ஐ)

## கொரோனா உயிரிழப்பு; 63 இலட்சத்தை கடந்தது!

நியூயோர்க், மே 24

உலகம் முழுவதும் கொரோனா தொற்றுக்கு பலி யானவர்களின் எண்ணிக்கை 63 இலட்சத்தை கடந்தது.

வேர்ல்டோமீற்றர் வலைதள புள்ளிவிவரங் களின்படி, கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் உலகம் முழுவதும் 330 பேர் கொரோனாவுக்கு பலியாகினர்.

இதையடுத்து, கொரோனா பலி எண்ணிக்கை சர்வதேச அளவில் 63 இலட்சத்தைக் கடந்தது. அதாவது, 63 இலட்சத்து 88 பேர் கொரோனாவுக்கு பலியாகினர்.

மரண எண்ணிக்கையின் அடிப்படையில் அமெரிக் காவிலேயே அதிக மரணங்கள் நிகழ்ந்துள்ளன. அங்கு, 10 இலட்சத்து 28 ஆயிரத்து 902 பேர் தொற்றுக்கு பலியாகினர். பிரேஸிலில் 6 இலட்சத்து 65 ஆயிரத்து 657 பேரும், இந்தியாவில் 5 இலட்சத்து 24ஆயிரத்து, 413 பேரும், ரஷ்யாவில் 3 இலட்சத்து 78 ஆயிரத்து 350 பேரும் உயிரிழந்தனர். (ஐ)

# ஐ. பி. எல். இருபது - 20 தொடர் இறுதி சுற்று இன்று ஆரம்பம்!

கொல்கத்தா, மே 24

ஐ. பி. எல். தொடரின் லீக் போட்டிகள் முடிவடைந்துள்ளன. இதையடுத்து, இறுதிச் சுற்று போட்டிகள் இன்று செவ்வாய்க் கிழமை முதல் ஆரம்பமாகின்றன. முதல் போட்டியில் குஜராத் டைட்டன்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதவுள்ளன.

15ஆவது ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் போட்டியின் லீக் போட்டிகள் மும்பை, புனே நகரங்களில் நடைபெற்றன. இந்த லீக் போட்டிகள் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தன.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் டில்லியை மும்பை வென்றதால் இறுதிச் சுற்றுக்கு பெங்களூர் அணி தகுதி பெற்றது.

குஜராத், ராஜஸ்தான், லக்னோ, பெங்களூர் அணிகள் இறுதிச் சுற்றுக்கு முன்னேறின. மும்பை இந்தியன்ஸ், நடப்புச் சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைற் ரைடர்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத், பஞ்சாப் கிங்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ் ஆகிய 6 அணிகள் தொடரில் இருந்து வெளியேறின.

இந்நிலையில், இன்று செவ்வாய்க்கிழமை முதல் இறுதிச் சுற்று



ஆரம்பமாகிறது. கொல்கத்தாவின் ஈடன் கார்டனில் நடைபெறும் முதல் தகுதிச் சுற்று போட்டியில் குஜராத் டைட்டன்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதுகின்றன. இதில் வெற்றி பெறும் அணி இறுதிச் சுற்றுக்கு நேரடியாக முன்னேறும்.

25ஆம் திகதி நடைபெறும் வெளியேறும் சுற்றுப் போட்டியில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன. இதில் தோற்கும் அணி தொடரில் இருந்து வெளியேறும்.

27ஆம் திகதி அஹமதாபாத்தில் நடைபெறும் 2ஆவது தகுதிச்சுற்று ஆட்டத்தில், முதல் சுற்றில் தோல்வி அடைந்த அணியும், வெளியேறும் சுற்றில் வெற்றி பெற்ற அணியும் மோதும். இதில்வெற்றி பெறும் அணி இறுதிச் சுற்றுக்கு முன்னேறும்.

29ஆம் திகதி அஹமதாபாத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியில் முதல் தகுதிச்சுற்றில் வென்ற அணியும், 2ஆவது தகுதிச்சுற்றில் வென்ற அணியும் மோதும்.



## குசல் மெண்டிஸ் மருத்துவமனையில்!

டாக்கா, மே 24

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த இலங்கை அணி வீரர் குசல் மெண்டிஸ் நெஞ்சு வலி காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்துபவர் குசல் மெண்டிஸ். 27 வயதான அவர் இதுவரை 82 ஒருநாள், 48 டெஸ்ட் மற்றும் 32 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். தற்போது பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறார்.

நேற்று ஆரம்பமான இரண்டாவது டெஸ்டின் முதல் நாள் ஆட்டத்தில் மதிய நேர உணவு இடைவேளைக்கு முன்பாக குசல் மெண்டிஸ் திடீரென நிலைதடுமாறி விழுந்து நெஞ்சை பிடித்தபடி களத்தில் இருந்து வெளியேறினார். இதையடுத்து அவர் டாக்காவின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஐ)



## பிறீமியர் லீக் உதைபந்தாட்டம் மன்செஸ்டர் சிற்றி சம்பியன்!

மன்செஸ்டர், மே 24

2021-22 பிறீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது மன்செஸ்டர் சிற்றி அணி. கடந்த ஐந்து ஆண்டுகளில் அந்த அணி வென்றுள்ள நான்காவது பிறீமியர் லீக் பட்டம் இதுவாகும்.

இந்த தொடரில் 20 அணிகள் பங்கேற்றன. ஒவ்வோர் அணியும் தொடரில் உள்ள மற்ற அணிகளுடன் தலா 2 போட்டிகளில் விளையாட வேண்டும். ஒவ்வொரு அணிக்கும் 38 போட்டிகள். இதில், புள்ளிகள் அடிப்படையில் முதலிடம் பிடிக்கும் அணி சம்பியன் பட்டம் வென்றதாக அறிவிக்கப்படும்.

இதுவரையில் இந்த ததொடரை மன்செஸ்டர் யுனைற்றட் அணி அதிகபட்சமாக 13 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளது. மன்செஸ்டர் சிற்றி அணி ஆறு முறை பட்டம் வென்றுள்ளது.

2011-12, 2013-14, 2017-18, 2018-19, 2020 - 21 மற்றும் 2021-22 ஆகிய தொடர்களை மன்செஸ்டர் சிற்றி அணி வென்றுள்ளது. நடப்பு தொடரில் 38 போட்டிகளில் விளையாடி 29 வெற்றியை பதிவு செய்துள்ளது மன்செஸ்டர் சிற்றி. 6 போட்டிகள் சமனிலும், 3 போட்டிகளில் தோல்வியையும் தழுவியுள்ளது. மொத்தம் 93 புள்ளிகளை பெற்று சம்பியன் பட்டம் வென்றுள்ளது. லிவர்பூல் அணி 28 வெற்றிகள் மற்றும் 92 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தை பிடித்தது. அஸ்டன் வில்லா அணிக்கு எதிரான கடைசி போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது மன்செஸ்டர் சிற்றி.

பிறீமியர் லீக் உதைபந்தாட்டம்!

## தங்க காலணி விருதை வென்ற முதல் ஆசியர்!

மன்செஸ்டர், மே 24

நடப்பு பிறீமியர் லீக் தொடரில் முகமது சாலா மற்றும் தென் கொரிய வீரர் சன் ஹெய்னுங் மின் ஆகியோர் அதிக கோல்களை பதிவு செய்த வீரர்களாக தொடரை நிறைவு செய்தனர். அதனால் இருவரும் தங்கக் காலணி விருதை பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இதில் 29 வயதான சன் ஹெய்னுங் மின், ரோற்றன்ஹாம் ஹொற்பர் உதைபந்தாட்ட கழக அணிக்காக விளையாடி வருகிறார். அவர் கடந்த 2015 முதல் அந்த அணியில் இடம்பெற்றுள்ளது. மொத்தம் 231 போட்டிகளில் விளையாடி, 93 கோல்களை அவர் பதிவு செய்துள்ளார். இதில் நடப்பு பிறீமியர் லீக் தொடரில் மட்டுமே அவர் 23 கோல்களை பதிவு செய்துள்ளார். மறுபக்கம் எகிப்து வீரர் முகமது சாலாவும் நடப்பு தொடரில் 23 கோல்களை பதிவு செய்துள்ளார். அதனால் இருவருக்கும் தங்கக் காலணி விருது பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

முதன்முறையாக ஆசிய கண்டத்தை சேர்ந்த ஒருவர் பிறீமியர் லீக் தொடரில் இந்த விருதை வெல்வது இதுவே முதன்முறை. தென்கொரிய அணிக்காக 98 போட்டிகளில் விளையாடி, 31 கோல்களை பதிவு செய்துள்ளார் சன் ஹெய்னுங் மின். இவர் தென் கொரிய அணியின் தலைவரும்கூட முன்கள வீரரான அவர் ஆசிய கண்டத்தின் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களில் ஒருவராக அவர் அறியப்படுகிறார்.





## கடைசிப் போட்டியில் பஞ்சாப் அணி வெற்றி!

மும்பை, மே 24

நடப்பு ஐ. பி. எல். தொடரின் கடைசி லீக் போட்டியில் ஹைதராபாத் அணியை 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது பஞ்சாப் கிங்ஸ் அணி.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 70ஆவது லீக் போட்டி மும்பையில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - பஞ்சாப் கிங்ஸ் அணிகளுக்கு இடையே நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணியின் தலைவர் புவனேஷ்வர் குமார் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 157 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணிக்காக அபிஷேக் ஷர்மா (43 ஓட்டங்கள்), ரொமாரியோ ஷெப்பர்ட் (26 ஓட்டங்கள்), வாஷிங்டன் சுந்தர் (25 ஓட்டங்கள்), மார்க்ரம் (21 ஓட்டங்கள்), ராகுல் திரிபாதி (20 ஓட்டங்கள்) எடுத்தனர்.

பஞ்சாப் அணிக்காக ஹர்ப்ரீத் பிரார், நதன் எல்லிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

158 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை பஞ்சாப் விரட்டியது. அந்த அணி ஆரம்பம் முதலே அதிரடியாக ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டது. பெயர்ஸ்ரோ, ஷிகர் தவான், ஷாருக்கான், லிவிங்ஸ்ரன், ஜிதேஷ் ஷர்மா ஆகியோர் சிறப்பாக விளையாடினர். லிவிங்ஸ்ரன், 22 பந்துகளில் 49 ஓட்டங்களை எடுத்திருந்தார். 15.1 ஓவர்கள் முடிவில் 160 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் ஆட்டத்தை வென்றது பஞ்சாப். (ஐ)

# எரிபொருள் வரிசையில் மோதல் பஸ் சாரதி ஒருவருக்கு கத்திகுத்து!

## அறுவர் கைது!!

கொழும்பு, மே 24

பதுளையில் வாகனங்களுக்கு எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கு வரிசையில் இருந்தவர்களிடையே ஏற்பட்ட மோதலில், தனியார் பஸ் சாரதியொருவர் கத்தி குத்துக்கு இலக்காகியுள்ளார். இதையடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

பதுளை பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனியார் பஸ்களுக்கு எரிபொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு பஸ்கள் வரிசைகள் நின்றன. பின்னாலிருந்து பஸ்ஸொன்று முன்னால் சென்று எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முயற்சித்த போது, பெரும் அமைதியின்மையும், பதற்றமும் ஏற்பட்டது.

அத்துடன் வரிசையிலிருந்த பிரிதொரு தனியார் பஸ் சாரதி, முன்னால் சென்று எரிபொருளைப் பெற முயற்சித்த பஸ் சாரதியை, கத்தியினால் வெட்டியதுடன், தமது பஸ்ஸையும் எடுத்துக்கொண்டு கத்தியுடன் தப்பிச் சென்றுள்ளார்.



இரத்த வெள்ளத்தில் கிடந்த தனியார் பஸ் சாரதியை, பதுளைப் பொலிஸார் தடைகளை மீறி 1990 அவசர அம்புலன்சில் ஏற்றி பதுளை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளின் பயனாக மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய ஆறுபேரை நேற்று காலை கைது செய்தனர்.

வெட்டுக் காயங்களுக்குள்ளானவர் பதுளை வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ)

# குரங்கம்மை நோய் குறித்து பீதியடைய தேவையில்லை

கொழும்பு, மே 24

உலகின் பல நாடுகளில் பரவிச் செல்லும் குரங்கம்மை நோய் தொடர்பாக நாட்டு மக்கள் தேவையற்ற பீதியடைய தேவையில்லை என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை எதிர்ப்பு சக்தி, ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். இந்த நோய் அறிகுறி தொடர்பில் சாதாரண பி.சீ.ஆர் பரிசோதனை மூலம் கண்டறிய முடியும்.

தற்போது உலக நாடுகளில் குறைந்த வீரியம் கொண்ட நோயாளர்களே அடையாளம் காணப்படுகின்றனர்.

இலங்கை மக்கள் இது தொடர்பில் தேவையற்ற பீதி அடைய வேண்டாம்.

காய்ச்சல், தலைவலி, உடல் வலி, களைப்பு போன்ற அறிகுறிகள் மூலமே இந்த நோய் ஏற்படக் கூடும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை எதிர்ப்பு சக்தி, ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்திர தெரிவித்துள்ளார். (அ)

# கொழும்பை வந்தடைந்தது மேலும் 40,000 மெற்றிக் தொன் பெற்றோல்

கொழும்பு, மே 24

மேலும் 40,000 மெற்றிக் தொன் பெற்றோலுடனான கப்பல் ஒன்று கொழும்பு வந்துள்ளது.

இந்திய கடன் உதவியின் கீழ் இந்த பெற்றோல் தொகை இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்திய தூதரகம் பதிவிட்டுள்ள ருவிட்டர் செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளது.(அ)


## மரண அறிவித்தல்



### திருமதி நாகராசா தனலெட்சுமி

**தோற்றம்** 15 -06- 1932

**மறைவு** 20 -05- 2022

மலேசியா Kuala Lumpur ஐப் பிறப்பிடமாகவும், யாழ். புங்குடுதீவு 11ஆம் வட்டாரம், கனடா Toronto, Brampton ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா தனலெட்சுமி அவர்கள் 20-05-2022 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மருதப்பு வேலுப்பிள்ளை நாகரத்தினம் தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா மாரிமுத்து தம்பதிகளின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற V.K நாகராசா அவர்களின் ஆருயிர் மனைவியும், நாகலெட்சுமி(ராணி), நவலெட்சுமி (நவம்), ஸ்ரீஸ்கந்தராசா(ராசன்), ஸ்ரீதனராசா (ஸ்ரீ), தவமலர்(மலர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,கனகலிங்கம், ஸ்ரீதிருமகன், சுகந்தி, சிவானந்தி, உலகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்ற V.K பாலசிங்கம், V.K பரஞ்சோதி(அதிபர்- கனடா), Dr. V.K ஆனந்தமூர்த்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு அண்ணியம்மாவும்,உலகநாயகி, மங்களாம்பாள் (ஆசிரியை), காலஞ்சென்ற ஜானகிதேவி ஆகியோரின் பாசமிகு சகலியும்,காலஞ்சென்றவர்களான தம்பிராசா பரிபூரணம் தம்பதிகளின் அன்பு பெறாமகளும்,காலஞ்சென்றவர்களான சிவசங்கரன், சாம்பசிவம், நாராயணன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும்,காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, மாரிமுத்து மற்றும் திருநாவுக்கரசு மாமணி, காலஞ்சென்ற சாம்பசிவம், சிவசோதி, காலஞ்சென்றவர்களான சிவசாமி புவனேஸ்வரி, பேரம்பலம் மீனாட்சி ஆகியோரின் சம்மந்தியும்,சசீபன்- உஸிகா, சஜீதன் - மதுரா, சகீஸன் - ஜஸிகலா, சுஜீபன், ஆரணி, சங்கீர்த்தன், கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும்,சயோதன், அருண்யா, சாகித்தியன், சபரீசன், சீனுசன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும்,அஜன், ஆதி, ஸிவானி, ஜெய்டன், றியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

*பார்வைக்கு*
Wednesday, 25 May 2022 5:00 PM - 9:00 PM
Brampton Crematorium & Visitation Center 30 Bramwin Ct, Brampton, ON L6T 5G2, Canada

*கிரியை*
Thursday, 26 May 2022 8:00 AM
Brampton Crematorium & Visitation Center 30 Bramwin Ct, Brampton, ON L6T 5G2, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு:*
**கனகலிங்கம் ராணி - மகள்** Mobile : +19057899965
**ராசன் சுகந்தி - மகன்** Mobile : +41791736260
**ஸ்ரீ சிவானந்தி - மகன்** Mobile : +41787323268
**உலகநாதன் - மலர் - மகள்** Mobile : +41766828750
**சசி - பேரன்** Mobile : +16472919274
**சஜி - பேரன்** Mobile : +16472873719

**தகவல்:**
**ராசன் சுகந்தி - மகன்**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 19 - 07 - 1962



**மறைவு** 20 - 05 - 2022

### F.X.அன்ரன்

*(கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்)*

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கு.ஓ.அன்ரன் 20.05.2022 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் சேவியர் பிலோமினா நவறஞ்சிதம் ஆகியோரின் அன்பு மகனும், காலம்சென்ற ஸ்ரனிஸ்லொஸ் லூட்ஸ்மேரி புஸ்பராணி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கிறிஸ்ரபெஸ் அனோஜா (ஆசிரியர் யாஃ வேம்படி மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், நிக்கலின் (இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்) மாறியோ (தேசிய அபிவிருத்தி வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும், றஞ்சினி, றஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், லொஜிற் (கனடா), கொஸ்கா (கனடா), அருட்பணி நெவில் ஞானராஜ் (அவுஸ்திரேலியா), யூடித் (கனடா), மெல்வின் (கனடா), குபேரகுலேந்திரன், கமலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், எல்விஸ், எல்றோய் ஆகியோரின் அருமை சித்தப்பாவும், பிரவின், பிருந்தினி ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி 24.05.2022 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இறுதிப் பயணத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதன்பின் மிருசுவில் புனித நீக்கொலார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 37/7 மாட்டீன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**பிள்ளைகள்**
**(நிக்கலின், மாறியோ)**

## மருந்து...

80 வீதமான மருந்துகள் இலங்கையினால் இறக்குமதி செய்யப்படுகின்றன. எனினும், அந்நியச் செலாவணி தட்டுப்பாடு காரணமாக, மருந்து இறக்குமதி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன், பல மருந்துகளுக்கு சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மஹரகம வைத்தியசாலை புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் நாட்டின் முதன்மையான மருத்துவமனையாகும். இதில் 950 படுக்கைகள் உள்ளன. ஆனால், அங்குள்ள நோயாளிகள், அவர்களின் உறவினர்கள், மருத்துவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

மருந்துகள் பற்றாக்குறையால் அத்தியாவசிய சுகாதார பராமரிப்பு மற்றும் அறுவை சிகிச்சையை அதிகாரிகள் ஒத்திவைக்க வேண்டியிருந்தது. இந்த நிலை புற்றுநோயாளிகளுக்கு மிகவும் மோசமானது என மருத்துவர் ரொஷான் அமரதுங்க தெரிவித்தார். சில நாட்களில் நாங்கள் காலையில் அறுவை சிகிச்சைகளைத் திட்டமிடுகிறோம். ஆனால், சில நேரங்களில் மருந்துகள் பற்றாக்குறையால் அந்த நாளில் செய்ய முடியாது என்றும் விரைவில் நிலைமை சீரடையவில்லை என்றால், பல நோயாளிகள் இறக்கும் தறுவாயில் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## உணவு...

மக்களுக்கு உதவுவதற்காகச் சில குழுக்களை நியமித்துள்ளோம். அந்தக் குழுக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி எவரும் உதவிகளைச் செய்யலாம். வெளிநாட்டில் இருப்பவர்கள் மாத்திரம் அல்லர், உள்நாட்டில் இருப்ப வர்களும் உதவிகளைச் செய்ய முடியும்" - என்றார்.

## 21ஆம்...

- முன்னர் நடைமுறை யில் இருந்த 19ஆவது திருத்தச் சட் டத்தை மீள நடைமுறைப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு இந்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நேற்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தத் திருத்தச் சட்ட மூலத்தை வரும் வெள்ளிக்கிழமை கட்சிகளின் தலைவர்களிடம் வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (ஐ)

## ஜூன்...

இம்முறை சனிப் பெயர்ச்சி பலமாக உள்ளது. அப்போது செவ்வாய் சிம்ம ராசியின் ஏழாவது வீட்டில் இருந்தார். தற்போது செவ் வாய் ராசியில் சனி இருக்கிறார்.

செவ்வாய் தவிர, வெள்ளியும் உள்ளது. இந்த குறுகிய காலத்தில் ஒட்டுமொத்த மக்களும் ஒற்றுமையாக நின்று தங்களின் தவறுகளை திருத்தி அனைத்து அம்சங்களையும் திருத்தி முன்னேற முடியும்.

ஜூலை 6 ஆம் நாள் இந்த முதல் சனி இந்த பாத்தி ரத்தை 50வீதம் பூர்த்தி செய்யும் என்பதை நான் பொறுப்புடன் சொல்கிறேன். அப்போது அவன் கோணலாக இருப்பான். ஆனால், அந்த வளைவு அவ்வளவு பலமாக இல்லை. 2023 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் நாளுக்குப் பின்னர் இலங்கை சுழியத்தில் இருந்து தொடங்கி சரியான திசையில் நகர்கிறது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் தற்போதைய அரசு சரமாரியான குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கி வருகின்றது. அரசின்மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும், இந்த நெருக்கடிகளுக்கு சோதிட ரீதியாக பல காரணங்கள் இருக்கின்றன.

எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் நாளுக்குப் பின்னர் நாட்டில் புதிய தலைவர் ஒருவர் உருவாகுவார். இதன் பின்னர் நாட்டில் பல பெரும் எழுச்சிகள் ஏற்படும் - என்றார்.

## பொருள்...

தெரிவித்தார்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மூன்று மாதங்களுக்கு முன்னதாக சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருந்தால் அவசியமான உதவிகளை இலகுவாகப் பெற்றிருக்க முடியும். ஆனால், வெளிநாட்டுக் கையிருப்புக்கு பற்றாக்குறை ஏற்பட்டதன் பின்னர் இந்தப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட தால் உதவிகளைப் பெறுவது கடினமான செயன்முறையாக மாறியுள்ளது.

உதவிளைப் பெறுவதற்கு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆகியவற்றுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாரிஸ் கிளப் உறுப்பு நாடுகள் மற்றும் பாரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்காத இந்தியா, சீனா போன்ற நாடுகளுடனும் பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளோம் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## இனப்பிரச்னை...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் எனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் நலன்கருதிச் செயல்படாமல் சர்வதேசத்துடன் இணைந்து பணியாற்றவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

"இனப்பிரச்னைக்குத் தீர்வைக் கண்டிருந்தால் இப்போதைய பொருளாதார நெருக்கடியை தவிர்த்திருக்க முடியுமல்லவா?" என்று கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எமது ஆட்சிக் காலத்தில் தீர்வை வழங்க நாம் முன்னெடுத்த நடவடிக்கைகளை ஒரு பக்கத்தில் விடுதலைப் புலிகளும் மறுபக்கத்தில் அன்றைய எதிர்க்கட்சியினரும் குழப்பியடித்தார்கள். அதன் பின்னரும் தீர்வை வழங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தன. நல்லாட்சி அரசின் காலத்தில் கூட தீர்வு சம்பந்தமான விடயத்தில் முன்னேற்றகரமாக நகர்வுகள் இருந்தாலும், இறுதிக் கட்டத்தை அடைய முடியாமல் போய்விட்டது. இதற்கு நல்லாட்சி அரசில் அங்கம் வகித்த சகலரும் பொறுப்புக்கூற வேண்டும்.

ராஜபக்ஷக்கள் போரை முடிவுக்கு கொண்டு வந்து, தாமே ராஜாக்கள் ஆக வேண்டும் என்று கனவு கண்டு அதைச் சாதித்தார்களே தவிர, தீர்வு விடயத்தில் துளியளவும் அக்கறை செலுத்தவில்லை. போரில் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் விடயத்தில் அசமந்தமாகவே ராஜபக்ஷக்கள் செயல்பட்டனர்.

இன்று பொருளாதாரம் நெருக்கடி உச்சமடைந்ததையடுத்து ராஜபக்ஷக்களுக்கு எதிராகவே சிங்கள மக்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர். இந்தநிலையில் பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகியதையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் அந்தப் பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக இருந்த இந்த அரசின் தலைவரான ஜனாதிபதி கோட்டாபய அனைத்து மக்களின் வேண்டுகோளையும் புறம் தள்ளி பதவியில் இருக்கின்றார். ஜனாதிபதிக்கு எதிராக வீதிகளில் இறங்கிப் போராடும் மாணவர்கள் மீது பொலிஸார் மனிதாபிமானம் பாராது கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி அவர்களைத் தாக்கி வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் நாட்டை இன்னும் மோசமான நிலைமைக்கே இட்டுச் செல்லும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடன் பதவி விலகவேண்டும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் நலன் கருதிச் செயல்படாமல் அனைத்து இன மக்களின் நலன்கருதி சர்வதேசத்துடன் ஒன்றிணைந்து தீர்மானங்களை எடுக்க வேண்டும். அப்போதுதான் இந்தப் பொருளாதார நெருக்கடி தீர்வைக் காண முடியும்"- என்றார். (ஐ)

# மக்கள் ஒத்துழைப்பு இல்லையேல் எரிபொருள் விநியோகம் நிறுத்தம்!

## எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மே 24

எரிபொருள் விநியோகத்தின் போது பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கத் தவறினால் எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தப்படும் என்று எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

நேற்று ஊடக சந்திப்பு ஒன்றை நடத்திய அந்த சங்கத்தின் பிரதித் தலைவர் குசும் சதநாயக்க, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சில நபர்கள் பலவந்தமாக எரிபொருளைப் பெற முயற்சிக்கின்றனர். இரவு 10 மணிக்கு மூடப்பட வேண்டிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அதிகாலை 2 மணி வரை திறந்திருந்தன. பொலிஸ் மற்றும் இராணுவத்தின் உத்தரவுகளை மதிக்காமல் அதிகாலை 3:30 மணி வரை திறக்குமாறு சில நபர்களால் அச்சுறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறான செயல்பாடுகள் தொடருமாயின் எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தப்படும். பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை தங்களுடையது என கருதி ஊழியர்களை பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறான செயல்பாடுகள் தொடருமானால், அரசாங்கத்துடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து எரிபொருள் நிரப்பு நிலையங்களை மூட வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

ஒரு வார தேவைக்காக எரிபொருள் இருப்புக்களுக்கு கட்டளை வழங்கப்பட்டாலும், கிடைப்பவை போதுமானதாக இல்லை. 200-250 வாகனங்களுக்கு நிரப்பக்கூடிய 6,600 லீற்றர் டீல் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன. பேருந்து ஒன்றுக்கு குறைந்த பட்சம் 100-125 லீற்றர் டீசல் தேவைப்படுகிறது. அதாவது 6,600 லீற்றர் டீசலை 66 லொறிகள் அல்லது பேருந்துகளுக்கு மட்டுமே வழங்க முடியும். எவ்வாறாயினும், வாகனங்கள் இந்த எண்ணிக்கையை விட மும்மடங்கு வரிசையில் நிற்கின்றன.

சில நபர்கள் எரிபொருளை நிரப்பிய பின்னர், வீடுகளில் கான்களில் நிரப்பி விட்டு, மீண்டும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் எரிபொருளைப் பெறுவதற்காக வரிசையில் இணைகின்றனர் என்றும் அவர் சாடினார். (ஐ)

# உக்ரைன் போரால் பாதிக்கப்படும் நாடுகளில் இலங்கையும் அடக்கம்!

நியூயோர்க், மே 24

ரஷ்யா மற்றும் உக்ரைன் யுத்தத்தினால் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் அதிகம் தாக்கத்துக்குள்ளாகும் 12 நாடுகளின் பட்டியலில் இலங்கை உள்ளடக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் யுதத்தால் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அதிகம் தாக்கத்துக்குள்ளாகும் 12 நாடுகளை, ஐ. நா.வின் ஆசிய - பசுபிக் பிராந்தியத்துக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக் குழு பட்டியலிட்டுள்ளது.

இவ்வாறு பட்டியலிடப்பட்டுள்ள 12 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் ஒன்றாகும். இலங்கையுடன் பாகிஸ்தான், ஆர்மேனியா, கம்போடியா, ஜோர்ஜியா, கஸகஸ்தான், மாலைதீவு, சமோவா, சொலமன் தீவுகள், தஜிகிஸ்தான், வனாட்டு ஆகியன நாடுகள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இந்நாடுகள் தமது பொருளாதார கட்டமைப்பு மற்றும் சூழ்நிலைகள் காரணமாக எரிபொருட்கள் மற்றும் உணவுகளின் விலை அதிகரிப்பு, குறைந்தளவு வெளிநாட்டு நிதி வரவுகள், நிதியியல் செலவு அதிகரிப்புகள் முதலியன காரணமாக மேலும் பாதிக்கப்படலாம் என அந்த ஆணைக்குழு அச்சம் தெரிவித்துள்ளது.

கம்போடியா, பாகிஸ்தான், சொலமன் தீவுகள், வனாட்டு ஆகியன ஏனைய ஆசிய - பசுபிக் பிராந்திய நாடுகளைவிட எரிபொருள் விலையேற்றத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், இலங்கை ஆகியனவற்றின் வெளிநாட்டுக் கடன்கள், மற்றும் கடன் சேவை விகிதம் உச்சநிலை பெறுமானத்தை விஞ்சியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வாசுதேவ...

குழு. எனவே, இந்த நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்டும் நோக்கில் கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிடவுள்ளோம்.

"ஐக்கிய மக்கள் சக்தியால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அரசமைப்பின் 21ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக தமது குழுவும் வாக்களிக்கும் என்று நம்புகின்றேன். நிறைவேற்று அதிகாரங்கள் நாட்டின் ஜனநாயகத்துக்கு பாதகமானவை என்று தமது குழு நம்புவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் தெரிவித்தார்.

ஆளும் கட்சியில் இருந்து சுயேச்சையாக இயங்குவதாக அறிவித்து அணி மாறிய போது 11 கட்சிகளாகப் பிரிந்த போதிலும், சிறீ லங்கா சுதந்திரக் கட்சி அந்தக் குழுவில் இருந்து விலகியமையால் தற்போது 10 கட்சிகள் அந்தக் குழுவில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய...

சர்வகட்சி அமைச்சரவையில் முதல் முஸ்லிமாக ஹாபீஸ் நஸீர் அஹமட் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் சுற்றாடல் அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

டக்ளஸூக்கும் நஸீருக்கும் கோட்டாபய - மஹிந்த தலைமை யிலான கடந்த அமைச்சரவையில் வழங்கப்பட்டிருந்த பொறுப்புக்களே மீளவும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவரான மஹிந்த அமரவீர கமத்தொழில், வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த அமைச்சரவையில் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்த பந்துல குணவர்தனவுக்குப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுடன் வெகுஜன ஊடக அமைச்சும் வழங்கப்பட்டுள்ளது. இவரே அமைச்சரவை பேச்சாளராகவும் நியமிக்கப்படக்கூடும்.

கடந்த வாரம் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்ட கெஹலிய ரம்புக்வெல, இன்று நீர் வழங்கல் அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அதேவேளை, கடந்த வாரம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராகப் பதவியேற்ற ரமேஷ் பத்திரண, நேற்று கைத்தொழில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சராக விதுர விக்கிரமநாயக்கவும், நீர்ப்பாசனம், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக ரொஷான் ரணசிங்ஹவும் நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## பொது பாதுகாப்பு அமைச்சின் செயலர் அல்விஸ் ராஜினாமா

கொழும்பு, மே. 24

பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜகத் அல்விஸ் தனது பதவியை இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குற்றப்புலனாய்வுப் பிரிவில் சுமார் 4 மணிநேரம் வாக்குமூலம் வழங்கிய நிலையில் அவர் அங்கிருந்து வெளியேறினார்.

கடந்த 9 ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் அவர் வாக்குமூலம் வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## இலங்கைக்கு அமெரிக்கா உதவி வழங்கவேண்டும்

### அமெரிக்க தூதுவரிடம் இ.தொ.கா கோரிக்கை



கொழும்பு, மே. 24

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி ஜியூன் சங் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் நடைபெற்றது.

இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் இந்தச்சந்திப்பில் கலந்துக்கொண்டனர்.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு அமெரிக்கா உதவி வழங்க வேண்டும் என இதன்போது இ.தொ.கா அமெரிக்க தூதுவரிடம் கோரிக்கை விடுத்தது.

அத்துடன், இலங்கைகான அமெரிக்காவின் பொருளாதார, கலாசார, சமூக ரீதியான உதவித்திட்டங்களில் எதிர்காலத்தில் மலையக மக்கள் உள்வாங்கப்பட வேண்டும் என இ.தொ.கா அமெரிக்க தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்தது.

மேலும் உலக வங்கி, நாணய நிதியம் இலங்கைக்கு உதவி வழங்குவதில் அமெரிக்கா கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் என கலந்துரையாடப்பட்டது. (அ)

## 300 முக்கிய மருந்துகளுக்கு நாட்டில் கடும் தட்டுப்பாடு

கொழும்பு, மே. 24

நோயாளிகளுக்கான சுமார் 300 அத்தியாவசிய மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் ஆயுட்காலத்தை நேரடியாக பாதிக்கும் 25 அத்தியாவசிய மருந்துகள் எந்தவொரு அரச மருத்துவமனைகளிலும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தீவிர இதய நோய்க்கான மருந்துகள், புற்றுநோயாளிகளுக்கான மருந்துகள், நீரிழிவு நோய்க்கான தடுப்பூசிகளான இன்சுலின் போன்றவையே இவ்வாறு அரச மருத்துவமனைகளில் இல்லை என கூறப்படுகிறது.

இந்த 25 மருந்துகளுக்கும் தனியார்துறை மருந்தகங்களிலும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

டொலர் தட்டுப்பாடு மட்டுமின்றி, தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியின் திறமையின்மை மற்றும் மோசமான நிர்வாகமும் இந்த நிலைக்கு முக்கிய காரணம் என சுகாதார அமைச்சக வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## அரசமைப்பில் உள்ள அதிகாரங்களை 21 இன் மூலம் நிரந்தரமாக்கவேண்டும்

### ரெலோ கோரிக்கை

கொழும்பு, மே. 24

"21ஆவது சட்டத் திருத்தம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதோடு ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கக்கூடிய அதிகாரப் பகிர்வை நிரந்தரமாகவும் மீளப் பெறப்பட்ட அதிகாரங்களை மீண்டும் வழங்குவதற்கும் வழி செய்யவேண்டும்."

- இவ்வாறு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியாக ரெலோ கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து ரெலோ வெளியிட்டுள்ள அறிக்கையில்-

தெற்கின் அரசியல் நகர்வுகளில் கருத்து தெரிவிப்பதில் நேரத்தை வீணடிப்பதை தவிர்ப்பதே சிறந்தது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான இருபத்தியோராம் திருத்த சட்ட மூல பரிந்துரைகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட இருக்கின்றன.

ஒருவரிடத்தில் அனைத்து அதிகாரங்களும் குவிந்து இருப்பதை எதிர்த்து தமிழ்த் தேசியத் தரப்புகள் ஒருமித்த அறிக்கை ஒன்றையும் அண்மையில் வெளியிட்டிருந்தோம். ஜனாதிபதியின் எதேச்சாதிகாரப் போக்கை இல்லாதொழிக்க இது உதவும். நிறைவேற்று அதிகாரத்தை பாராளுமன்றத்துக்கு வழங்குவது ஜனநாயகத்தை உறுதி செய்யும்.

ஆனால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அல்லது பாராளுமன்றம் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வினை கடந்த காலங்களில் வழங்கத் தவறியுள்ளன. இந்த திருத்தங்கள் ஊடாகத் தமிழ் மக்களுக்கு உறுதியாகப் பெற்றுத் தரக்கூடிய அதிகார விடயங்களை தமிழ் அரசியல் தரப்பினர் கையாள முன்வரவேண்டும்.

சமர்ப்பிக்கப்பட இருக்கும் 21ஆவது சட்டத் திருத்தம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதோடு ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கக்கூடிய அதிகாரப் பகிர்வை நிரந்தரமாகவும் மீளப் பெறப்பட்ட அதிகாரங்களை மீண்டும் வழங்குவதற்கும் வழி செய்யவேண்டும். ஏற்கனவே அரசியல் யாப்பில் கூறப்பட்ட அதிகாரங்களை வலுப்படுத்தி, மீள் நிறுத்தி முற்றாகப் பகிர்வதற்கு முன்மொழியப்பட இருக்கும் 21 ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ்த் தரப்புக்கள் பயன்படுத்தி கொள்ளவேண்டும்.

புதிய அரசியல் யாப்பின் மூலமே இதைச் செய்யமுடியும், மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற பல சாக்கு போக்கினை ஆளும் தரப்பினர் சொல்ல முற்படுவார்கள். ஆனால் ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள விடயங்களை முற்றுமுழுதாக நடைமுறைப் படுத்துவதற்கு புதிய அரசியல் யாப்பு அல்லது மக்கள் வாக்கெடுப்பு அவசியமில்லை. திருத்தங்களின் மூலமே அவற்றை செய்து கொள்ள முடியும்.

அரசியல் யாப்பில் இல்லாத நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்குவதற்கு 20 ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியபோது மக்கள் வாக்கெடுப்பு தேவைப் படவில்லை. ஆனால் தமிழ் மக்களுக்கு ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது அதிகாரங்களை வலுப் படுத்துவதற்கு மக்கள் வாக்கெடுப்பு தேவை எனக் கூறி தப்பித்துக் கொள்வது எந்த விதத்தில் நியாயம்?

புதிய அரசியல் யாப்பு, பொதுஜன வாக்கெடுப்பு என்பன நாம் கோருகின்ற நிரந்தரமான சமஷ்டி முறையான அரசியல் தீர்வை வழங்குவதற்கே அவசியம் என்பதை தமிழர் தரப்பு வலியுறுத்தவேண்டும்.

தெற்கிலே ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலைகளில் ஆர்வத்தோடு தினமும் பாராளுமன்றத்தில் கருத்து தெரிவித்து வருவது தமிழ் மக்களுக்கு நலன் பயக்காது. அங்கு ஆக்ரோஷத்தோடு எதிர்ப்பு கருத்து தெரிவிப்பதும் பிரேரணைகளை முன்வைப்பதும் அவர்களோடு கலந்துரையாடல்களில் ஈடுபடுவதும் ஒருபுறம் இருக்க கொண்டு வரப்பட இருக்கும் 21ம் திருத்தத்தில் ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள அதிகாரங்களை முற்றாக பகிர வலியுறுத்த நாம் முயல்வது ஆக்கபூர்வமானதாக அமையும்.

ஏற்கனவே அரசியல் யாப்பில் அதிகாரங்கள் பல வழங்கப்பட்டு உள்ளன. அவை நிரந்தரமாக்கப் படவும் இல்லை. பகிரப்படவும் இல்லை. முற்றாக நடைமுறைப் படுத்தப் படவும் இல்லை. இன்னொரு வகையில் கூறுவதாக இருந்தால் அரசியல் யாப்பில் உள்ள விடயங்கள் நடைமுறைப்படுத்துவதில் பாரிய இடைவெளியை காண்கிறோம். ஜனாதிபதி முறைமையில் அரசியல் யாப்பில் சொல்லப்பட்ட விடயங்களை அரசாங்கம் முற்றுமுழுதாக நடைமுறைப் படுத்துகிறது. ஆனால் அதிகாரப் பகிர்வு என்று வருகின்ற பொழுது இருப்பதையே நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் பின் நிற்கின்றது.

ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ளவற்றுக்கும் நடைமுறைப் படுத்துவதற்குமான இடைவெளியை சீராக்கி முற்றாக நடைமுறைப்படுத்த வேண்டும். இதை கையாள்வது எமது கடமை. ஏனெனில் எதிர்காலத்தில் சமஷ்டி முறையான தீர்வு அரசியல் யாப்பில் கொண்டு வரப்பட்டாலும் அது நடைமுறைப் படுத்துதில் பாரிய சிக்கல்களை நாங்கள் எதிர்கொள்ள நேரிடும்.

இந்த சந்தர்ப்பத்தை சரியான முறையில், சிறப்பாக ஒருமித்து நின்று கையாள்வதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகளையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் தயவுடன் அழைக்கின்றோம் - என்றுள்ளது. (அ)

## புதிய வெளிவிவகார செயலாளராக அருணி விஜயவர்த்தன கடமையேற்பு!

கொழும்பு, மே. 24

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் புதிய செயலாளராக அருணி விஜயவர்த்தன நேற்று வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

மே 20 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் அவர் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

கடமைகளைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து நடைபெற்ற எளிமையான வைபவத்தின் பின்னர், வெளிவிவகார செயலாளர் விஜயவர்த்தன அமைச்சின் அதிகாரிகளிடம் உரையாற்றினார்.



இலங்கை வெளிநாட்டு சேவையின் உறுப்பினரான, வெளிவிவகார செயலாளர் அருணி விஜயவர்த்தன, 34 வருடங்களாக வெளிநாட்டு சேவையில் ஈடுபட்டுள்ளதோடு, கொழும்பில் உள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலும், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலும், சர்வதேச நிறுவனங்களிலும் பல பதவிகளை வகித்துள்ளார்.

தனது வெளிநாட்டுப் பணிகளில், ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான இலங்கைத் தூதரகம், மலேசியாவிலுள்ள இலங்கை தூதரகம், பிலிப்பைன்ஸில் உள்ள இலங்கைத் தூதரகம் ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார்.

ஒஸ்ட்ரியாவுக்கான இலங்கைத் தூதுவராகவும், வியன்னாவில் உள்ள ஐ.நா. அமைப்புக்களுக்கான நிரந்தரப் பிரதிநிதியாகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அங்கீகாரத்தின் பேரில், வியன்னாவில் உள்ள சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் கொள்கை உருவாக்கும் உறுப்புக்களின் செயலகத்தின் பணிப்பாளராகவும் திருமதி. அருணி விஜேவர்தன பணியாற்றியுள்ளார்.

ஐக்கிய இராச்சியத்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் முதுமாணிப் பட்டம் பெற்றுள்ள திருமதி விஜயவர்த்தன, அங்கு பிரிட்டிஷ் செவனிங் அறிஞராகத் திகழ்ந்ததுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும், மேற்கு அவுஸ்திரேலியா பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டமும் பெற்றுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - பூமி,காவலன் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

